# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 24, புதன்கிழமை 09.11.2016 | கதிர் 04



Ogesta
Lighting, Switches & Sockets
Wires & Cables Home Appliances
PVC pipes & Fittings, Taps & Faucets
Bathroom Accessories
780A, 780B, K.K.S.Road,
Thattatheru Junction, Jaffna.
T.P: 021 221 8758
(C/005)


# வடமாகாண சபையை நேற்று அதிரவைத்த ஊழல் விவகாரங்கள்

## உள்ளூராட்சிமன்ற நிர்வாகங்கள் குறித்து உறுப்பினர்கள் காரசாரமான கருத்து மோதல்

*- அவைச் செய்தியாளர் :- அ.றொக்சன் -*

யாழ்ப்பாணம், நவம்பர் 09

**வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு ஊழல் விவகாரங்களினால் அதிர்ந்தது. மாகாண சபையின் கீழ் வரும் உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றில் கடந்த காலங்களில் இடம்பெற்றது எனக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள், துஷ்பிரயோகங்கள் என்பன குறித்து சபை உறுப்பினர்கள் காரசாரமான குற்றச்சாட்டுக்களை கூறிக் கருத்து மோதலில் ஈடுபட்டனர்.**

சபையின் 65 ஆவது அமர்வு நேற்றுக் காலை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோதே இவ்வாறான காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

வடமாகாண சபையின் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைமீதானபரிசீலனையும் விவாதமுமே நேற்று இடம்பெற்றன.

2012, 2013 ஆம் ஆண்டுகளில் யாழ். மாநகர சபையில் இடம்பெற்றவிடயங்கள்குறித்து அந்த அறிக்கைவிலாவாரியாக புட்டுப் புட்டு வைத்தது.

அச்சமயம்மாநகரசபையின் நிதிக் கையாளுகை முறைமையின்போது இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் பல்வேறு தவ

பக்கம் 20 >>>

# 'நெல்சிப்' திட்ட ஊழல் விவகாரம் நிதிக் குற்றவியல் விசாரணைக்கு

## *நேற்றைய சபை அமர்வில் தீர்மானம்*

'நெல்சிப்' திட்டத்தின் மூலம் உலக வங்கியினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு செய்வதற்கு இந்த அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் நேற்று அவையில் தெரிவித்தார்.

மேலும் நிதி குற்றவியல் விசாரணைப்பிரிவிலும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் இவ் விடயம் குறித்து முறைப்பாடு செய்யப்படும் எனவும் கூறினார்.

வடமாகாண சபையின் 65 ஆம் அமர்வு நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போது 'நெல்சிப்'திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை ஆகியவற்றில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக

பக்கம் 20 >>>

# கிளிநொச்சியில் எரிந்தவற்றில் 45 கடைகள் மீளமைக்கப்பட்டு நேற்று கையளிக்கப்பட்டன

கிளிநொச்சி, நவ.09

கிளிநொச்சிப் பொதுச்சந்தையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் எரிந்த கடைகளுக்குப் பதிலாக அமைக்கப்பட்ட 45 புதிய கடைகள் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் சந்தை வியாபாரிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட பாரிய தீ காரணமாக 125 கடைகள் எரிந்து அழிந்திருந்தன. இதில் 66 கடைகள் முழுமையாகவும், 59 கடைகள் பகுதியளவிலும் எரிந்து அழிந்திருந்தன.

எரிந்து அழிந்த 22 பழ வியாபாரக் கடைகள் உடனடியாக ஓரிரு வாரங்களுக்குள் புதியனவாகத் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்ட நிலையில், ஏனைய புடவை, அழகு சாதன வியாபாரம், காலணி வியாபாரக் கடைகளை அமைப்பதற்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி நிதியிலிருந்து ஒரு கோடி 13 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிதியைக் கொண்டு புடவை, அழகு சாதன வியாபாரம், காலணிவியாபாரக்கடைகள் - 45

பக்கம் 20 >>>





# மாநகரசபை ஊழல்கள் குறித்து சிவஞானமும் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.09

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து நேற்று மாகாண சபை அமர்வின்போது பேரவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் ஒரு வாங்கு வாங்கினார்.

'கையூட்டு' விவகாரங்கள் குறித்தும் அவர் குறிப்பிடத்தவறவில்லை.

நேற்றைய உரைகளுக்கு நடுவில் அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

"நான் கணக்காளர். முறியடிப்புக் கணக்கியலும் முறியடிப்புக் கணக்காய்வும் எனக்கு விளங்கும். யாழ். மாநகர சபையின் திட்டமிடல் பிரிவில் கணிசமான முறைகேடுகள்நிகழ்கின்றமையை முன்பே

பக்கம் 20 >>>



# பிரி, அமைச்சர் - சம்பந்தன் சந்திப்பு

இலங்கைக்குவிஜயம்செய்திருக்கும் பிரிட்டனின் வெளிவிவகாரமற்றும்பொதுநலவாயபணியகத்துக்கானஇராஜாங்கஅமைச்சர் பரோனீஸ் அன்லி அம்மையாரைஎதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுகொழும்பில்உள்ளபிரிட்டிஷ் தூதரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் அரசமைப்பு உருவாக்கம்தொடர்பில்அமைச்சருக்குத் தெளிவுபடுத்திய கூட்டமைப்பின் தலைவர், தேசிய பிரச்சினைக்கான நிரந்தரத்

பக்கம் 20 >>>

# வலிகாமம் மேற்கில் நேற்றிரவு முகமூடி நபர்கள் அட்டகாசம்

## *கத்திவெட்டில் இருவர் காயம், மோட்டார் சைக்கிள் சேதம்*

முகங்களைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்ற மூவர் நடத்திய தாக்குதல்களில் இருவர் காயமடைந்தமையுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமானது.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை - அராலி வீதி மற்றும் சித்தங்கேணி டச்சு வீதி ஆகிய இடங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இவை தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

நேற்றிரவு 7.50 மணியளவில் முகங்களைக் கறுப்புத் துணிகளால் மறைத்தவாறு ஒரு மோட்

பக்கம் 20 >>>

## ஹிலாரி கிளிண்டன் முன்னிலையில்!

நேற்று நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் வெற்றியீட்டுவது 90 வீதம் உறுதியாகியிருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. அவரது வெற்றி இன்று பிற்பகலில் உறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அளப்பு அருணாசலம்



அப்ப இனி அன்ரியின் பிடியில் அமெரிக்கா எண்டு சொல்லுங்கோ...!

# அழிவில் இருந்து மீள் எழுவோம் என்பதை கிளிநொச்சி மக்கள் நிரூபித்திருக்கிறார்கள்

## சந்தைக் கடைத் திறப்பு நிகழ்வில் முதல்வர் விக்கி பெருமிதம்

கொழும்பு,நவ.09

எம்மக்கள் சாதி, சமய, வர்க்க மத வேறுபாடுகளைக் கடந்து ஒருமித்து உழைத்து மிகக் குறுகிய காலத்தினுள் வெற்றியடையக் கூடியவர்கள் என்பதை கிளிநொச்சி மக்கள் நிரூபித்திருக்கிறார்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தீ விபத்தால் எரிந்து அழிந்த சந்தைக் கடைத் தொகுதி மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு அதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றபோது, அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பலரும் ஒன்று சேர்ந்து மிகக் குறுகிய காலத்தினுள் இந்த 45 கடைகளையும் கட்டியமை எமக்கு மனமகிழ்வைத் தருகின்றது.

தீப்பிடித்த செப்ரெம்பர் 16 ஆம் திகதி இரவிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் உங்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா 20ஆயிரம் தரக்கூடியதாக இருந்தது.

அப்பொழுது நடந்த கூட்டத்தில் நான் ஒருவிடயத்தைக் கூறினேன். இங்கு வந்து வெறுமனே பேசுவதால் பயனில்லை; நாங்கள் செயலில் காட்ட வேண்டும் என்றேன்.

நாங்கள் செயலில் காட்டுவதற்கு சகலரும் ஒத்துழைத்து இந்த 45 கடைகளையும் இன்று திறக்கக் கூடியதாக இருக்கின்றது.

எங்கள் அலுவலர்களும் ஒப்பந்தக்காரர்களும் ஊர் மக்களும் ஒன்று சேர்ந்து இவ்வாறான செயலில் ஈடுபட்டமை மற்றைய எல்லோருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இன்றைய காலகட்டத்தில் வடமாகாணத்தில் தேவையானது யாவரதும் ஒத்துழைப்பே. வேறுபாடுகள், வித்தியாசங்கள் காட்டாது ஒரு நல்ல காரியத்திற்காக ஒன்றுபட சகலரும் முன்வர வேண்டும்.

இதைத்தான் கிளிநொச்சி மக்கள் மற்ற மக்கள் யாவருக்கும் எடுத்துரைத்துள்ளார்கள்.

சுனாமியின் போது இலங்கை இராணுவத்தினரும் புலிகளும் ஒன்று சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவினார்கள். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு பின்னர் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதைப்படி இருவரும் பிரிந்து விட்டார்கள்.

இன்றைய காலகட்டத்தில் ஒற்றுமை ஒன்றே எம்மை வழி நடத்திச் செல்லும். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன்.

ஆளுநர் அவர்கள் வடமாகாணம் பற்றிக் கூறியிருந்தார். வடமாகாண மக்கள் சாதியாலும் வர்க்கத்தாலும் கல்வி வேற்றுமைகளாலும் மதத்தாலும் வேற்றுமைப்பட்டு முன்னேற முடியாமல் ஒருவருக்கொருவர் முரண்பட்டு இருக்கிறார்கள் என அவர் கூறினார் என்று செய்தி இருந்தது.

இன்றைய உங்கள் ஒற்றுமைச் செயற்பாடு அவரது அவதானத்தைப் பொய்மைப்படுத்துவதாக அமைந்துள்ளது. எம் மக்கள் சாதி, சமய, வர்க்க மத வேறுபாடுகளைக் கடந்து ஒருமித்து உழைத்து மிகக் குறுகிய காலத்தினுள் வெற்றியடையக் கூடியவர்கள் என்பதை கிளிநொச்சி மக்களாகிய நீங்கள் இன்று அவருக்குப் பதிலளித்துள்ளீர்கள்.

உங்கள் ஒற்றுமை எம் எல்லோருக்கும் முன்மாதிரியாக அமைய வேண்டும். இச் செயற்பாட்டிலே உங்கள் பிரதேச சபைச் செயலாளர் கம்சநாதனுடன் பிரதம செயலாளர், எமது அமைச்சின் செயலாளர் மேலும் பல அலுவலர்கள் சேர்ந்து உரிய பணத்தைச் சேகரித்து குறுகிய காலத்தினுள் இக்கடைகளைக் கட்ட உதவியுள்ளார்கள்.

எமது செயலாளர் திருமதி. கேதீஸ்வரன் பிரதம செயலாளரிடம் இருந்து பணத்தைக் கறந்து இச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார்.

விரைவில் இம்மாத முடிவுக்கு முன்னர் நட்டஈடாக 74 மில்லியன் ரூபா உங்களுக்குக் கிடைக்கப் போகின்றது. மேலும் புதிய சந்தைக் கட்டடத்திற்கு 150 மில்லியன் ரூபா கிடைக்கப் போகின்றது.

மேலும் தீயணைப்புப் படையணி உருவாக்க 100 மில்லியன் ரூபா, எல்லாமாக 324 மில்லியன் ரூபா அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நட்டஈடு இம்மாதத்தில் கிடைக்கும். சந்தைக் கட்டடமும், தீயணைப்புப்படையணியும் அடுத்த வருடம் தொடங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனை எனது 50 வருடகால நண்பர் கௌரவ சுவாமிநாதன் அவர்கள் தொலைபேசியில் எனக்குக் கூறினார். எமது மனமார்ந்த நன்றிகள் அவருக்கு உரித்தாகுக.

வெகுவிரைவில் கிளிநொச்சியில் புதியதொரு சந்தை உருவாக்கப்படும் என்பது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அத்தோடு யாவரும் சேர்ந்து ஒரு செயற்பாட்டில் இறங்க முடியும் என்பது எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. - என்றார். (ம)

# மன்னாரில் முன்னறிவிப்பற்ற மின்தடையால் மக்கள் பாதிப்பு

## அரசியல்வாதிகள், அதிகாரிகள் பாராமுகம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல தினங்களாக அடிக்கடி இரவும் பகலும் மின் தடை அமுல் படுத்தப்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தொடர்ந்து மின்சாரம் தடைப்படுகின்ற போதிலும் இதனைச் சீரமைத்து மக்களுக்கு உரியவாறு மின்சாரம் விநியோகிப்பதற்கு மின்சார சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மன்னாரில் முன்னறிவித்தல் இன்றி திடீர் திடீரென மின்சாரம் வெட்டப்படுகின்றது. இதனால் தமது பெறுமதிமிக்க மின் உபகரணங்கள் பழுதடைகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 6 ஆம் திகதி இரவு திடீரென பல மணிநேரம் மின்சாரம் தடைப்பட்டமையைத் தொடர்ந்து மின் ஒழுக்கின் காரணமாக மன்னார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாகியது. இங்கிருந்த பண நோட்டுக்களும் பெறுமதிமிக்க பொருட்களும் தீயில் எரிந்து அழிந்துள்ளன.

மேலும், அடுத்த மாதம் க.பொ.த .சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் இந்த மின்சாரத் தடையால் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த விடயத்தில் மன்னார் மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் கூடிய கவனம் எடுத்து தங்களுக்கு சீரான மின்சாரம் கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# வவுனியாவில் லொறியுடன் மோதுண்டு பொலிஸ் மோப்ப நாய் உயிரிழப்பு

வவுனியா, நவ.09

வவுனியா - இரட்டைக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மோப்ப நாய் ஒன்று நேற்று விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளது. இதனால் குறித்த நாயின் பராமரிப்பு உத்தியோகத்தர் விசாரணையை எதிர்நோக்கியுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் நாயைப் பராமரிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் உடற்பயிற்சியாக வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது அந்த நாயும் அவருடன் சென்றது. இதன்போது வீதியால் பயணித்த லொறி ஒன்று மோதியதால் நாய் அந்த இடத்திலேயே உயிரிழந்தது.

பொலிஸாரின் உத்தியோகபூர்வ நாயைப் பாதுகாப்பதற்குத் தவறியமையினால் அந்த நாய்க்கு பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் பதவி இடைநிறுத்தம் செய்யப்படுவதோடு, நாயின் பெறுமதியும் அவரிடமிருந்து அறிவிடப்படும் என வவுனியா பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சௌமியமூர்த்தி தொண்டமானை 'நொண்டிக்குதிரை' எனலாமா?

## முகப்புத்தக பதிவேற்றத்துக்கு எதிராக முறைப்பாடு

அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் பி.சந்திரசேகரன் ஆகியோரை நொண்டிக் குதிரைகள் என்று முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவர் எஸ்.பி.அந்தோனிமுத்து இந்த முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார்.

வடக்கில் பிரபாகரனும் தெற்கில் விஜயவீரவும் ஆயுதப் போராட்டம் நடத்தியபோது, மலையகத்தில் அஹிம்சை ரீதியிலான சாத்வீக போராட்டத்தை நடத்தியவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

அவரது வழிநடத்தல் காரணமாகவே, மலையக இளைஞர்கள் இன்றும் அமைதி, அஹிம்சை கொள்கைகளைக் கடைபிடித்து வருகின்றனர் என்று எஸ்.பி. அந்தோனிமுத்து தெரி வித்தார்.

இவ்வாறான அவர்களை கடந்த 19 ஆம் திகதி 'பேஸ்புக்' பயனாளர் ஒருவர் நொண்டிக் குதிரைகள் என்று பதிவேற்றம் செய்தார்.

இப்பயனாளரின் செயற்பாட்டைக் கண்டித்துள்ள எஸ்.பி.அந்தோனிமுத்து, அவ்விடயத்தை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் கவனத்துக்கும் கொண்டு வந்தார்.

பின்னர், பூஜித் ஜயசுந்தரவின் பணிப்பின்பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் இயக்குநர் டி.ஆர்.எஸ்.ஆர்.நாகமுல்லவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை நேரில் சந்தித்து அவரிடமும் முறையிட்டுள்ளார். (ம)

# ஏழு பேர் நேற்றுக் கைது

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டு நீதிமன்ற வழக்குத் தவணைகளுக்குச் சமுகமளிக்கத் தவறிய குற்றச்சாட்டில் மல்லாகம் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஏழு பேரை அச்சுவேலி பொலிஸார் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

சப் இன்ஸ்பெக்ரர் எஸ்.ஜி அனில்குமார தலைமையிலான பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையிலேயே குறித்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் பெண்களாவர்.

கைது செய்யப்பட்ட இவர்களை இன்று புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-09)

# சர்வதேச நீரிழிவு தினமும் நூல் வெளியீடும் திங்களன்று

## யாழ். வேம்படி மகளிர் பாடசாலையில்

யாழ்ப்பாணம், நவ.09

சர்வதேச நீரிழிவு தின நிகழ்வும் "நீரிழிவை வெற்றி கொள்வோம்" நூல் வெளியீடும் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் யாழ். நீரிழிவு நிலையத் தலைவர் தி.மைக்கல் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் நூல் ஆய்வுரையை 'சுகவாழ்வு' ஆசிரியர் கா.வைத்தீஸ்வரனும், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் இ.சுரேந்திரகுமார், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் எம்.அரவிந்தன், யாழ். மாநகர சபை வைத்திய அதிகாரி பொ.ஜெசிதரன் ஆகியோர் சிறப்புரையையும் ஆற்றுவார்கள்.

விசேட நிகழ்வுகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஓரங்க நாடகமும், யாழ். மாநகர சபையினரால் நீரிழிவு மருத்துவ முகாமும், கைதடி சித்த மருத்துவப் பீடத்தினரால் நீரிழிவைக் கட்டுப்படுத்தக்கூடிய மூலிகைகள் கண்காட்சியும், அதன் விளக்கமும் நடத்தப்படவுள்ளன.

நீரிழிவு நோயாளர்களுக்கு இலவசப் புத்தகங்களும் அங்கு வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். நீரிழிவு நிலையம், முதியோர் சுகவாழ்வுக் கழகம், யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், யாழ். லயன்ஸ் கழகம், சர்வோதயம், யாழ். மரவட்டச் செயலகம் ஆகியன கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. (இ-7-19)

# பெண்கள் மீதான வன்முறைகள் அதிகம் சமூகக் கட்டுப்பாட்டால் முறைப்பாடில்லை

*யாழ்.வந்த பிரித்தானிய பெண் அமைச்சருக்கு சுட்டிக்காட்டு*

"யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகளவில் இடம்பெறுகின்ற போதிலும் குறைந்தளவிலான முறைப்பாடுகளே கிடைக்கின்றன. முறைப்பாடுகள் குறைவடைய சமூகக் கட்டுப்பாடுகளே காரணம்"

இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய இராஜாங்க அமைச்சர் பரோனீஸ் அன்லிபிசி அம்மையாருக்குத் தெரிவித்துள்ளனர் பொலிஸார்.



நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த பரோனீஸ் அன்லிபிசி பண்ணையில் அமைந்துள்ள பெண்கள், சிறுவர் விவகார பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார்.

அங்கு பொலிஸார் 'தேவை நாடும் பெண்கள்' அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள், பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர்பான பட்டியல்களைப் பொலிஸார் அவரிடம் கையளித்தனர்.அந்தப் பட்டியலில் வன்முறைச் சம்பவங்களைக் காட்டிலும் முறைப்பாடுகள் குறைந்தளவிலானதாக இருப்பதை அவதானித்த ஆன்லே அம்மையார் அது தொடர்பில் கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த யாழ்ப்பாணப் பொலிஸார் சமூகக் கட்டுப்பாடுகளே அவற்றுக்குக் காரணம் எனத் தெரிவித்தனர்.

மேலும், யாழ்ப்பாணப் பெண்கள் பொலிஸில் இணைவதை 90 வீதமானவர்கள் விரும்புவதில்லை என்றும், பொலிஸில் சேரும் பெண்களை சமூகத்தினர் வேறுவிதமாகவே பார்க்கின்றனர்என்றும் பொலிஸார்அம்மையாருக்குக் கூறினர்.

## பீரிஸ் கட்சியில் இணைய மாட்டோம்

*வெல்கம கூறுகிறார்*

ஜி.எல். பிரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்டஸ்ரீலங்காபொது ஜன பெரமுன கட்சியில் தான் இணையப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இலஞ்ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜரான பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே உள்ளேன். புதிய கட்சியில் என்னால் இணைய இயலாது. இந்தத் தீர்மானத்தை தான் தனித்து எடுக்கவில்லை என்று வெல்கம கூறினார். (ஐ)

## ரவி கருணாநாயக்கவுடன் சந்திரிகா வரவு - செலவுத்திட்டம் பற்றிப் பேச்சு

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, நல்லாட்சி அரசின் ஸ்தாகபர்களுள் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளார்.

வரவு–செலவுத்திட்டம் தொடர்பில் இரகசிய கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காகவே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மக்களுக்கான பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் தொடர்பில் வரவு – செலவுத் திட்டத்தில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என சந்திப்பின் இறுதியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் வரவு – செலவுத் திட்டத்தில் அடங்கியுள்ள முக்கிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துக்கூற சந்திரிகாவும் – நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்காவும் மறுத்துவிட்டனர் என்று ஊடகம் ஒன்று தெரிவித்தது.

## புதிய கட்சியின் தலைமைக்கு மஹிந்தவை அழைக்க முடிவு

புதிய கட்சியில் தலைமைப் பொறுப்பேற்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கத் தீர்மானித்துள்ளதாக ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுஜனபெரமுனகட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு மகிந்த ராஜபக்ஷவை நாம் சம்மதிக்க வைப்போம் என ஜி.எல். பீரிஸ் நேற்றைய தினம் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த விடயம் தொடர்பில் மகிந்த எந்தக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

இதேவேளை,அதற்கு ஒப்புக்கொள்வார் என பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அண்மையில்பீரிஸ் புதிய கட்சியின்தலைமைத்துவத்தைஏற்றமையினால் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஉறுப்புரிமை இழக்கப்பட்டது. இருப்பினும் மகிந்தவின் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன்இணைந்துஅரசியல் வாதியாக செயற்பட்டு வருகின்றார்.

எவ்வாறாயினும், தனது உறுப்புரிமை பறிக்கப்பட்டமைக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்திருந்த முடிவை மீளாய்வு செய்ய வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக போட்டியிட்ட போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவும் இடை நிறுத்தப்பட்டார்.

பின்னர் அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதும்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த முடிவை இரத்துச்செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனவே இதனை வைத்து தனது நீக்கம் தொடர்பிலும் ஆராய வேண்டும் என பீரிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் எம்.பி. அலஸ் விடுவிப்பு; மேல் நீதிமன்றின் தீர்ப்பு இடைநிறுத்தம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் விளக்கமறியலை கொழும்பு மேல் நீதிமன்று இடைநிறுத்தியுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு 'ராடா' நிறுவனம் ஊடாக அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான 12 கோடியே 40 இலட்சம் ரூபாவை அலஸ் மோசடி செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்டிரான்அலஸ்உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைஎதிர்வரும்10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி குஷால் வீரரத்ன கடந்த 2 ஆம் திகதி உத்தரவிட்டார்.

இதனை எதிர்த்து அலஸ் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு நேற்று மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை இடை நிறுத்தம் செய்து முன்னாள் எம்.பி. அலஸை விடுவித்தார். (08)

## இராஜதந்திரிகளை துன்புறுத்தும் இலங்கை

*நாமல் குற்றச்சாட்டு*



கொழும்பு, நவ.09

மேற்கு நாடுகள் அல்லாத அயல்நாட்டு இராஜதந்திரிகளை நல்லாட்சி அரசு துன்புறுத்துகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் தெரிவித்துள்ளார்.

சீனத் தூதுவர் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டமை தொடர்பில், டுவிட்டர் பக்கத்தில் நாமல் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகளை அரசு மறந்து விட்டதாக நாமல் குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்ட சீனத் தூதுவர் இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்திருந்தார். இதனை நிவிர்த்தி செய்யும் வகையில் சீனத் தூதுவருக்கு வெளிவிவகார அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

உண்மையைப் பேசியதற்காக சீனத் தூதுவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார் என்றும் நல்லாட்சியால் இராஜதந்திரிகள் துன்புறுத்தப்படுகின்றனர் எனவும் அவர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (ஐ)

## வெளிநாட்டுப் பயணத் தடை; அரசியல்வாதிகளுக்கு ஆப்பு!

கொழும்பு, நவ.09

ஆளும் கட்சி அமைச்சர்கள், இரா ஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஒருமாத காலத்துக்கு வெளி நாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாளை 10ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படவுள்ளது. ஏதேனும் ஒரு காரணத்துக்காக முன்கூட்டியே ஏற்பாடு செய்த வெளிநாட்டுப் பய ணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமாயின் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் அது குறித்து ஆளும் கட்சியின் பிரதம கொறடா அலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணங் களை மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரசிங்கவிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஒருமாத காலம் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க வேண்டும். அமர்வுகள் நடைபெறும் முழுக் காலப் பகுதியிலும் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்க வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## மரை இறைச்சி கடத்திய இருவருக்கு அபராதம் விதிப்பு

திருகோணமலை, நவ.09

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து கிலோ மரை இறைச்சியைக் கொண்டு சென்ற இருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க நேற்று முன்தினம்திங்கட்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

கந்தளாய்பகுதியைச்சேர்ந்த 32, மற்றும் 43 வயதுடைய இருவருக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்தநபர்கள் வேட்டையாடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ள மரையின்



இறைச்சியை சோமபுர பகுதியில் இருந்து அக்போபுர பகுதிக்கு மோட்டார் சைக் கிளில் கொண்டு சென்றுள்ளார். இதன்போது அக்போபுர பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதான நபர்கள் இருவரையும் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. (ஐ)

## மஹிந்த சீனாவுக்கு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

சீன அரசின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று பத் தரமுல்லவில் அமைந்துள்ள மஹிந்தவின் அரசியல் இணைப்பு அலுவலக அதிகாரியொருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

சீன அரச பிரதிநிதிகள், அந்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்கள், சீன வாழ் இலங்கையர்கள் ஆகியோரை முன்னாள் ஜனாதிபதி சந்திக்க உள்ளார் எனவும் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600


## நீதி செய்வதாகவும் காட்டவேண்டும்!

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. செயற்திறனின்மை குறித்து ஒருபுறம் பேசப்பட்டால் மறுபுறம் ஊழல், துஷ்பிரயோகம் பற்றியும் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

அவை, வெளியில் இருந்து மட்டுமல்ல, உள்ளேயிருந்தும் - வடக்கு மாகாண சபைக்கு உள்ளேயிருந்தும் - சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மத்தியிலிருந்தும் - பலமாக எழுந்த வண்ணம் உள்ளன. அதுவும். ஆளும் தரப்பு நிர்வாகிகளுக்கு எதிராக, ஆளும் தரப்புக்குள் இருந்தே இத்தகைய குற்றச்சாட்டுகள் வலிமையாக எழுந்து வருகின்றமை வெளிப்படையானது. சபையின் அமர்வுகளில் மட்டுமல்லாமல், சபைக்கு வெளியில் - பொது இடங்களில் கூட - இத்தகைய விடயங்களை ஆளும் தரப்பினர் பகிரங்கமாக விசனத்துடன் வெளிப்படுத்தி வருகின்றனர். நமது ஊடகங்களுக்குப் பல விதத்திலும் அவ்வப்போது 'நொறுக்குத்தீனி'யாக அமையும் செய்திகளுள் வடக்கு மாகாணசபை நிர்வாகம், செயற்திறனின்மை, ஊழல், துஷ்பிரயோகம், அதிகாரப் போட்டி, உள்குத்துவெட்டு என இன்னோரன்ன பிறவிடயங்களே பிரதானமாக அடங்குகின்றன என்பதும் மறைக்கப்பட முடியாதது. அவ்வளவு தூரம் வடக்கு மாகாண சபையின் நிர்வாகச் சீத்துவம் சந்தி சிரிக்கின்றது.

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்குத் தார்மீக ரீதியில் பொறுப்பேற்க வேண்டியவர்கள் இருவர். அவர்கள் இருவருமே நிர்வாகத்துறையில் ஜாம்பவான்கள் என்று மதிக்கப்படவேண்டிய சிரேஷ்ட பிரஜைகள். ஒருவர் வடக்கு முதல்வர், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். மற்றையவர் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

அந்த இருவர் இடையேயான 'நல்லுறவு'கூட இப்போது சர்ச்சைக்குரியதாகியிருப்பது பகிரங்கத்துக்கு - அம்பலத்துக்கு - வந்திருக்கின்றது. இந்நிலைமையால், சபை நிர்வாகப் போக்கு மேலும் பாதிப்புறலாம் என சபையின் செயற்பாட்டில் அக்கறை கொண்டுள்ளோர் அஞ்சுகின்றனர்.

இந்தச் சூழலில், வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான ஊழல் குற்றசாட்டுக்கள் குறித்து விசாரணை செய்து, அறிக்கையிடுவதற்காக உயர்மட்ட - நீதித்துறை முறைமைகளை நன்கு அறிந்த - பிரமுகர்களை உள்ளடக்கி ஆணைக் குழு ஒன்றை வடக்கு மாகாண முதல்வர் நியமித்திருக்கின்றார்.

வடக்கு மாகாண சபைக்கும் அதன் அமைச்சர்களுக்கும் எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் கிளப்பப்பட்டுவரும் நிலையில், அவற்றுக்கு முடிவு கட்டும் வகையில் முதலமைச்சர் எடுத்த இந்தத் தீர்மானம் ஒருவகையில் வரவேற்கவும் பாராட்டவும் தக்கதே. ஆனால், அந்த முறைமையில் ஒரு தார்மீகத் தவறு இருப்பதை முதல்வருக்கு சுட்டிக்காட்டுவது எமது கடமையாகின்றது.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல, நிலைநாட்டப்படுவதுபோல காட்டப்பட வேண்டும்' - என்பதும் ஓர் இயற்கை நீதி. உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசரான - சட்ட மூதறிஞரான - முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அந்த நீதித்துறை அடிப்படையை நாம் சுட்டிக்காட்டுவது அபத்தமானது. அது அவருக்கு நன்கு தெரியும்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், அமைச்சுக்களினால் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் ஊழல், மோசடிகள், துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிக்கவே இந்த ஆணைக் குழுவை முதல்வர் நியமித்திருக்கின்றார்.

வடக்கு மாகாண அமைச்சர் என்ற குறிப்பில் பார்த்தால் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் வடக்கு மாகாண அமைச்சரே. முதலமைச்சர் என்ற நிலைக்கு அப்பால் சில அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் அவர் இருக்கின்றார். நிதி உட்படப் பல மாகாணத் துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் அவரே.

ஆக, அவரால் - அல்லது அவரின் கீழ் உள்ள அமைச்சால் - இழைக்கப்பட்ட ஊழல், மோசடி, நிதி துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்களும் மேற்படி ஆணைக்குழுவின் விசாரணை நியாயாதிக்க வரம்புக்குள் வரக்கூடியவைதான். அதை அவரே ஒரு தடவை மறுக்காமல் ஒப்புக்கொண்டுமிருக்கின்றார் - " எனக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் வந்தால் அவையும் விசாரிக்கப்படும்" - என்று.

மேலும் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள சில அமைச்சர்களை முதல்வர் தனக்கு நெருக்கமாக வைத்து காபந்து பண்ணுகின்றார் என்ற பேச்சும்கூட எழாமல் இல்லை.

இந்நிலையில், நீதி ஆயத்தை யார் நியமித்தாரோ, அவர் குறித்தும் அதே ஆயம் விசாரித்துத் தீர்ப்பளிக்கலாம் அல்லது உரிய சிபார்சை வழங்கலாம் என்று கூறுவது நீதி முறைமையையே இழுக்குப் படுத்துவதாகவே அமையும்.

மேற்படி நீதி விசாரணை நடவடிக்கைகளுக்குரிய உத்தேச நிதிச் செலவினத் திட்டத்தை எடுத்த எடுப்பிலேயே அங்கீகரிக்காமல், பின்னடித்தபோது, மாகாண ஆளுநர் இந்த விடயத்தையும் மேலோட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதில் ஒரு நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்த விவகாரத்தில், விசாரணைக்குரிய எல்லைப் பரப்புக்குள் தமது பதவி நிலை செயற்பாடுகளும் உள்ளடங்கும் என்பதைப் புரிந்துகொண்டுள்ள முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன், அது குறித்த கேள்விகள் எழமுன்னரே, நீதி ஆயத்தை நியமிக்கும் பொறுப்பை - உரிய சிபார்சுகளுடன் - ஆளுநரிடம் ஒப்படைத்து, அவர் மூலம் விடயங்களை நகர்த்தியிருக்கலாம். அது, நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி, நிலை நாட்டப்படுவதாகக் காட்டுவதாகவும் அமைய வழிசெய்திருக்கும்.

# இந்தியாவின் பொருளாதாரத்தை இலங்கை பயன்படுத்த வேண்டும்

## மைத்திரியிடம் கூறினார் பிரணாப்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை இலங்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இந்தியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார்.

அப்போது, இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்துறை ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து குடியரசுத் தலைவர் அலுவலக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளவை வருமாறு-

இலங்கையில் புதிய அரசு மேற்கொண்டு வரும் வளர்ச்சித் திட்டங்களை பிரணாப் முகர்ஜி வெகுவாகப் பாராட்டினார். மேலும், இலங்கையின் உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய இந்தியாவைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் ஆர்வமுடன் உள்ளன என்றும் பிரணாப் கூறியுள்ளார்.

வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரச் சக்தியாக உருவெடுத்துள்ள நிலையில், அண்டை நாடுகளையும் வளப்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாகக் கூறிய பிரணாப், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை இலங்கை பயன்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்தியாவும், இலங்கையும் இணைந்து பெரிய அளவிலான புதிய வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்றும் பிரணாப் விருப்பம் தெரிவித்தார்.

அவரது ஆலோசனைகளை ஏற்றுக்கொண்ட மைத்திரிபால சிறிசேன, இந்தியா, இலங்கை இடையேயான உறவு பலம் பெற்று விளங்குகின்றது என்றும் கூறினார்.

இலங்கையின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு இந்தியா செய்து வரும் உதவிகளுக்காக ஜனாதிபதி மைத்திரி நன்றி தெரிவித்தார் என்றும் அந்தச் செய்திகள் கூறுகின்றன. (ஐ)

# பார்வையை இழந்த முன்னாள் போராளிக்கு கனடாவாழ் புலம்பெயர் உறவால் நிதியுதவி

முல்லைத்தீவு உடையார்கட்டில் வசித்துவரும் முன்னாள் போராளி ஒருவருக்கு கனடா வாழ் புலம்பெயர் உறவு ஒருவரால் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

உடையார்கட்டைச் சேர்ந்த முன்னாள் போராளியான ஜஸ்ரின் பிரபாகரன் யுத்தத்தின்போது பார்வையை இழந்த நிலையில் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார். அவரது வீட்டுக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்குக் கூட அவரிடம் பண வசதி இல்லை. வடக்கின் வசந்தம் மூலம் வழங்கப்பட்ட இலவச மின்னிணைப்பும் அவருக்கு அதிகாரிகளால் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், 20 ஆயிரம் ரூபா நிதி செலுத்தியே மின்னிணைப்பைப் பெறவேண்டியுள்ளது. ஆனால், அவருக்கு இந்த நிதியுதவியை வழங்க எவரும் முன்வரவில்லை. இந்நிலையில், முல்லைத்தீவு ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் விருட்சம் ஊடாக வன்னி பட்டறை பிரதீபன் தர்மராஜாவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க ஜஸ்ரின் பிரபாகரனுக்கு நிதியுதவி கிடைத்துள்ளது.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் வாணிநிதி என்பவரால் அவரது பிறந்தநாளை ஒட்டி அவரால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜஸ்ரின் பிரபாகரனிடம் அவரது வீட்டுக்குச் சென்று கையளிக்கப்பட்டுள்ளது. (இ-க-1)

# இந்திய மீனவர் பிரச்சினை; அடுத்த பேச்சு இலங்கையில்

## கடற்றொழில் அமைச்சர் தகவல்

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்த அடுத்தகட்டப்பேச்சு இலங்கையில் இடம்பெறவுள்ளது. இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இந்தப் பேச்சு இடம் பெறும். இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் இந்தியா சென்றிருந்தனர்.

இதன்போது அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர், மீன்பிடி மற்றும் விவசாயத்துறை அமைச்சர் ஆகியோருடன் இரு தரப்பு பேச்சு இடம்பெற்றிருந்தது.

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதை இந்தியத் தரப்பு அதிகாரிகள் இதன்போது ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது என்று அமரவீர மேலும் கூறினார். (ஐ)

## ரஷ்ய விமான நிறுவனம் இலங்கையிலும் சேவை

இலங்கையில் தங்கள் சேவைகளை விஸ்தரிக்க ரஷ்யாவை தளமாகக் கொண்ட விமான நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

'Azur' விமான சேவை நிறுவனமே இலங்கை வரை தமது வர்த்தக நடவடிக்கையை விஸ்தரிக்க உள்ளது.

அதற்கமைய ரஷ்யாவின் மஸ்கட் நகரில் இருந்து அதன் முதல் பயணத்தை மேற்கொண்டு விமானம் நேற்று முன்தினம் மாலை 6.55 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது. முதலாவது விமானப் பயணத்தில் ரஷ்ய நாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் இலங்கை வந்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

# திருமறைக் கலாமன்றின் நாடகங்கள் கொழும்பு 'லிங்ஸ்' கலைப்பெருவிழாவில்

யாழ்ப்பாணம்,நவ.09

கெயார் சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் ,13 ஆம் திகதிகளில் கொழும்பில் 'லிங்ஸ்' கலைப் பெருவிழா நடைபெறும். நம்பிக்கையின் சிறகசைப்பு லிங்ஸ் கலைப் பெருவிழாவின் நிறைவு நாளான எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு 07 இல் அமைந்துள்ள லயனல்வெண்ட் அரங்கில் பி.ப 3.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் சிறப்புமிக்க ஆற்றுகைகளான வார்த்தைகளற்ற நாடகமும்,'அற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகமும் மேடையேற்றப் படவுள்ளன.

வார்த்தைகளற்ற நாடகம் பெருவெடிப்பிலிருந்து உலகம் உருவானது முதல் மனித குல உருவாக்கம்,பரிணாம வளரச்சி, இன்றைய தொழில்நுட்ப, இலத்திரனியல் உலகு வரையான வளர்ச்சிகளின் பரிமாணங்களை விஞ்ஞான பூர்வமாக அணுகி அதில் மனிதத்தினைத் தேடும் மா பெரும் படைப்பாக திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் சிங்களக் கலைஞர்களின் இணைந்த தயாரிப்பில் அரங்கேறவுள்ளது.

அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகம் சங்கப்பாடல்களில் குறிப்பிடப்படும் பறம்புதேசத்தை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய வேள்பாரி மன்னனின் வீரவரலாற்றையும், சேர சோழ பேரரசுகளின் கூட்டுச் சதியால் சிதைக்கப்பட்ட பறம்பு தேசத்தின் சோக வரலாற்றையும் கூறுவதோடு, அகதிளாகி அந்தரித்து நிற்கும் பாரியின் மக்களான அங்கவை சங்கவை மற்றும் புலவர் கபிலர் போன்ற பாத்திரங்களால் ஈழத் தமிழரின் சமகால வாழ்வியல் சோகத்தினை சொல்ல விளையும் படைப்பாகவும் இரு பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைக் கண்ட, ஈழத்தின் பல்வேறு பிரதேசக்கூத்து மரபுகளை ஒன்றிணைத்து ஆக்கப்பட்ட ஒயிலாக்க நாடகமாகவும் அமைகின்றது.(இ

## நாளை

10.11.2016
வியாழக்கிழமை
திதி : ஏகாதசி பி.இ 4.59 வரை
நட்சத்திரம் : பூரட்டாதி
மு.இ. 11.13 வரை
சுபநேரம் 07.35 – 09.05
இராகுகாலம் 1.35 – 3.05

# வெள்ளவத்தையில் பொலிஸ் பதிவு? மீண்டும் அச்சத்துக்குள் தமிழர்கள்!

கொழும்பு,நவ.09

வெள்ளவத்தையில் மீண்டும் பொலிஸ் பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் பதிவுக்கான படிவங்களைப் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெள்ளவத்தையின் சில பகுதிகளில் விநியோகித்தனர்.

இதைத் தொடர்ந்தே மக்கள் மத்தியில் மீண்டும் பொலிஸ் பதிவு ஆரம்பமாகிவிட்டதா என்ற அச்சம் எழுந்துள்ளது.

நாட்டில் போர் நடைபெற்ற சமயத்திலும், போர் முடிவுக்குவந்த பின்னரும் கூட கொழும்பில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் வெள்ளவத்தையில் பொலிஸ் பதிவுகள் இடம்பெற்றன. இந்தப் பொலிஸ் பதிவால் அங்குவாழும் மக்கள் பெரும் சிரமங்களையும் துன்பங்களையும் எதிர்கொண்டனர்.

ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து வெள்ளவத்தையில் பொலிஸ் பதிவு இடம்பெறாது என உறுதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸார் மீண்டும் பதிவுப் படிவங்களை விநியோகிப்பது மக்களிடையே அச்சத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், வெள்ளவத்தையின் தொடர்மாடிக் குடியிருப்புக்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்தே பொலிஸார் பதிவுப் படிவங்களை விநியோகித்துள்ளனர்.

எந்த அடிப்படையில் இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன என்பது தொடர்பில் தெளிவுபடுத்தப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

## ஆள்களைப் பதியக் கோருவதற்கு பொலிஸ் சட்டத்தில் இடமுண்டு

### *நாடு முழுவதும் தொடரும் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்*

கொழும்பு,நவ.06

எந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்களையும் பதிவு செய்வதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு. தவிர இது வழமையானதொரு நடவடிக்கையே எனத் தெரிவித்திருக்கிறார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர.

வெள்ளவத்தையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் பதிவுக்கானபடிவங்கள் விநியோகம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆள்களைப்பதிவு செய்யுமாறு கூற பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ்இடமுண்டு. தொடர்மாடிக் குடியிருப்பில் இருப்பவர்களை முதலில் பதிவு செய்யக் கூறியுள்ளோம்.

ஏனைய வீடுகளில் வசிப்பவர்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். வெள்ளவத்தையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் பதிவு ஆரம்பமே. இந்த நடவடிக்கை படிப்படியாக நாட்டின் சகல பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படும் - என்றார்.

# பொலிஸ் பதிவுப் படிவங்களை நிரப்பிக் கொடுக்க வேண்டாம் அதற்கான தேவை இல்லை என்கிறார் அமைச்சர் மனோ



கொழும்பு,நவ.08

வெள்ளவத்தைப் பொலிஸாரால் வழங்கப்படும் படிவங்களை நிரப்பிக் கொடுக்க வேண்டாம் என்று தேசிய சகவாழ்வு மற்றும் கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் மக்களைக் கேட்டுள்ளார்.

அந்தப் படிவங்களை நிரப்பிக் கொடுக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை எனத் தெரிவித்த அவர், இந்த விடயம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபிலவிஜேமன்ன, பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரட்ண ஆகியோருக்கும் அறிவித்துள்ளார் என்றார்.

சட்டத்துக்குப்புறம்பான நைஜீரியாவை சேர்ந்த சிலர் வெள்ளவத்தையில் வசிக்கின்றனர் என்றும் இவர்களைப் பிடிப்பதற்காகவே பொலிஸ் பதிவு ஆரம்பிக்கப்பட்டது எனவும் பொலிஸார் தமக்குத் தெரிவித்தனர் என அமைச்சர் கூறினார்.

இதற்குத்தாம் சந்தேக நபர்கள் தொடர்பில் மட்டும் தகவல் தருமாறு மக்களுக்கு அறிவிக்குமாறும் பொலிஸ் பதிவைக்கைவிடுமாறும்தாம் உத்தரவிட்டுள்ளார் என்றும் அமைச்சர் மனோ கணேசன் சொன்னார்.

## பரிசளிப்பு விழா

கரவெட்டி,நவ.09

அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் வழங்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் கலந்து கொள்வார். (இ-7)

# சமஷ்டிமுறை ஆட்சியே தேவை

### *கனடிய ஆய்வாளரிடம் முதல்வர் வலியுறுத்து*



யாழ்ப்பாணம்,நவ.09

"தமிழ்மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையிலான ஆட்சி முறையே அவசியம் தேவை.

இவ்வாறு தம்மைச் சந்தித்த கனேடிய மதிப்பீட்டு ஆய்வாளர்களிடம் வலியுறுத்திக் கூறியிருக்கிறார் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணம் வந்துள்ள கனேடிய மதிப்பீட்டு ஆய்வாளர்களான கொரேஸி, மக்வாரன், ஆகியோரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதலமைச்சர் விக்னேஸ்வரன்தனது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தின் நிலைமைகள், விதவைகள், முன்னாள்போராளிகள், பெற்றோரை இழந்த சிறுவர்கள் தொடர்பிலும் அவர்களுக்கு எந்த வகையில் உதவிகளை வழங்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும், கனடாவின் உதவித் திட்டங்களை எந்தவிதத்தில் வடக்கு மாகாணத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பிலும் பேசப்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வு, புதிய அரசமைப்புத் திட்டம் தொடர்பாக அவர்களுக்குக் கருத்துரைத்த முதலமைச்சர் "சமஷ்டி அரசியல் யாப்பே எமக்குத் தேவை" இல்லாவிடின் மத்திய அரசாங்கத்தின்கைகள் ஓங்கி எம்மைக் கட்டுப்படுத்தி விடும். எனவே சுயாட்சியைத் தரும் விதத்திலான அரசியல் யாப்பே வேண்டும்" என்று வலியுறுத்தினார். (இ-12)

## ஞானசார தேரருக்கு எதிராக கோட்டை பொலிஸில் முறைப்பாடு

பொதுபல சேனாவின் தலைவர் வண. ஞானசார தேரருக்கும் மற்றொருவருக்கும் எதிராக கோட்டை பொலிஸ் நிலையத்தில் இரு முறைப்பாடுகளை தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பு பதிவு செய்துள்ளது.


அந்த அமைப்பு, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்காக முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையைக் கண்டித்து கடந்த 3 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடை செய்யுமாறு கோரிய ஞானசார தேரர் கடந்த 2 ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது, "ஆர்ப்பாட்டம் செய்ய வரும் முஸ்லிம்களை எரித்துக் கொல்வோம். அவர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவோம்" என்று மிரட்டல் விடுத்தது.

மேலும், இஸ்லாமியர்கள் இறைவனாகத் தொழும் அல்லாஹை அவதூறு செய்யும் விதத்திலான கருத்துக்களையும் அவர் இதன்போது வெளியிட்டிருந்தார். அவருடன் இணைந்து இன்னொரு நபரும் ஆர்ப்பாட்டத்துக்கு வரும் முஸ்லிம்களைமிரட்டும்வகையில் பேசினார்.

இவர்கள் இருவருக்கும் எதிராகவேதவ்ஹீத் ஜமாத் அமைப்பு கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தனித்தனியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளது.

## இங்கிலாந்து வங்கி கடனட்டையில் புலிகளின் தலைவர் பிரபாவின் படம்




கொழும்பு,நவ.08

வங்கிக் கடனட்டையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம் பொறிக்கப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வைரலாகியுள்ளன.

இங்கிலாந்தின் பிரபல தனியார் வங்கியான பாக்கிளேஸின் கடனட்டையில்தான் தலைவர் பிரபாகரனின் படம் பொறிக்கப்பட்டுள்ளது.

அந்த வங்கியின் கடனட்டையில் விரும்பும் புகைப்படத்தை பிறிண்ட் செய்ய முடியும். இதனால் அங்கு வசிக்கும் தமிழர்கள் தங்களின் கடனட்டைகளில் பிரபாகரனின் புகைப்படங்களை பிறிண்ட் செய்துள்ளனர்.

இந்தப் புகைப்படங்களே தற்போது சமூகவலைதளங்களில் வைரலாகியுள்ளன.

# 'ஆவா' குழுவினர் மூவருக்கு ஒரு வாரம் விளக்கமறியல்

### *கொழும்பு நீதிமன்று விதித்தது*

கொழும்பு,நவ.08

'ஆவா' குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் கைதான மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவங்களில் ஈடுபடும் 'ஆவா' குழுவினரைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் விசேட நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த அவர்கள் முதலில் மூவரைக் கைது செய்தனர். பின்னர் மேலும் மூவரைக் கைது செய்தனர்.

கைதானவர்களைக் கொழும்புக்குக் கொண்டு சென்ற ரி.ஐ.டியினர் அவர்களை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் மூவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இதேசமயம் இச்சம்பவம் தொடர்பில் மேலும் விசாரணைகளில் தாம் ஈடுபட்டு வருகின்றனர் என ரி.ஐ.டியினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

## ஐயப்பன் விரத பெருவிழா

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தின் மகரஜோதி மண்டல விரதப் பெருவிழா வரும் 16 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஜனவரி 14 ஆம் திகதி வரை தொடர்ந்து 60 நாள்கள் இடம்பெறும் இந்தப் பெருவிழாவில் தினமும் காலை 6 மணிக்கு கணபதி ஹோமம், மூலவர் அபிஷேகம் என்பன இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு பஜனை 8.30 மணிக்கு 18 ஆம் படிபூசை ஹரிவராசனம் நடைசாத்தல் இடம்பெறும்.

விரத விழாவின் 60 நாள்களும் அன்னதானம் இடம்பெறும்.

# மதுசாலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள்!

## மண்முனைப்பற்று பிரதேச பொது அமைப்புகள் வேண்டுகோள்

மட்டக்களப்பு, நவ.09

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மதுபான சாலைகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவ'டிக்கை எடுக்குமாறு மண் முனைப்பற்று பிரதேச பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்றுபிரதேசசெயலகத்தின் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தின் மீளாய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் மண் முனைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலை வரும் மண் முனைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆரையம்பதி பிரதான வீதியில் உள்ள மதுபான சாலை யின் செயற்பாடுகளால் அந்தப் பகுதியில் மக்கள் தினமும் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அவற்றை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் இதன்போது தெரிவித்தார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கிரான்குளம் தொடக்கம் ஆரையம்பதி வரையில் மதுபானசாலைகள் மற்றும் மதுபான விற்பனை விடுதிகள் 7 இயங்கிவருகின்றன என்று பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

800 பேருக்கு ஒரு மதுபான சாலை என்ற ரீதியில் இயங்கி வருவதாகவும் இதன் காரணமாக மண்முனைப்பற்றில் பெரியளவில் சமூகச் சீர்கேடுகள் இடம் பெற்று வருகின்றன என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக ஆரையம்பதி பிரதான வீதியில் இயங்கிவரும் மதுபானசாலையால் அந்தப் பகுதியில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று பொது அமைப்புகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆரையம்பதியின் பிரதான வீதியில் இயங்கும் குறித்த மதுபானசாலைகள் உட்பட மண் முனைப்பற்றில் உள்ள மதுபான சாலைகளை மூன்றாகக் குறைக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மதுபானசாலைகள் வருடாந்தம் பிரதேச செயலகத்தில் புதுப்பிக்கப்படும்போது அது தொடர்பில் பிரதேச செயலாளர் பரிசீலிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.(ஏ)

## அக்கரைப்பற்றில் இளைஞன் விபத்தில் பலி!

அம்பாறை, நவ.09

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அக்கரைப்பற்று நகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதியதாலேயே இவ் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் பாலமுனையைச் சேர்ந்த 25 வயதான எம்.முஹம்மத் அன்வர் என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஏ)

## திருமலையில் இளைஞர்கள் இருவர் கைது

திருகோணமலை, நவ.09

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா ஆலங்கேணி பகுதியில், நேற்று முன்தினம் அதிகாலை, சந்தே கத்துக்கு இடமாக முறையில் நடமாடிய இளைஞர்கள் இருவரை கிண்ணியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது, 22 வயது நிறைந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களை காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகத் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஏ)



திருகோணமலை, மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலை மற்றும் பன்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றுக்கு, நீர்ச்சுத்திகரிப்புக் கருவிகள் வழங்கப்பட்டன.பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் தனிப்பட்ட செயலாளரால், நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இந்த நீர்த்தாங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## நுண்நிதி நிறுவனத்துக்கு தீவைப்பு; சந்தேகநபர்கள் 7 பேரும் விடுதலை

திருகோணமலை, நவ.09

மூதூர் நகரில் இயங்கிவந்த நுண்நிதி நிறுவனம் ஒன்றின் அலுவலகத்துக்குத் தீ வைத்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த எழுவரும் விடு தலைஅவர்களை செய்யப் பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்டமைக் கான தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பிக் கப்படாமையால், மூதூர் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இல்லியாஸ் முபாரிக், நேற்று முன் தினம் விடுதலை செய்தார்.

2014.03.17ஆம் திகதி இரவு வேளையில் அந்த நுண் நிதி நிறுவனத்துக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டது. இதன் போது, அந்த அலுவலகத்திலிருந்த முக்கிய ஆவணங்கள், தளபாடங்கள், கணினிகள் போன்றன தீயால் சேதமாகின.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த நிறுவனத்தில் கடமையாற்றிய 7 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிரான வழக்கு மூதூர் நீதி மன்றத்தில் இடம் பெற்று வந்தது. இந்த நிலையில் அவர்கள் தான் குறித்த நிறுவனத்தின் அலுவலகத்துக்கு தீ வைத்தனர் என்பதற்கான, ஆதாரங்கள் எவையும் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்படாததை அடுத்தே மேற்படி தீர்ப்பு வழங்கப் பட்டது. (ஏ)

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை தவிர்த்த மக்கள் பிரதிநிதிகள் !




வாழைச்சேனை, நவ.09

கோறளைப்பற்று–வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில், மக்கள் பிரதிநிதிகளில் அதிகமானோர் கலந்து கொள்ளாமல் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வாசுதேவனின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் பல அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, சில முக்கிய அரசியல்வாதிகள் கலந்து கொள்ளாமல் இருந்ததையிட்டு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்புகளின் சில பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட முடியாமல் போனதைக் காணக் கூடியதாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து, பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் இது குறித்துத் தெரிவிக்கையில்;

"இனிமேல் இவ்வாறான முக்கிய அபிவிருத்திக் குழு கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படும் திகதிகளில் வேறு அரசியல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதைத் தவிர்த்து கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இக்கூட்டத்தில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், பிரதேச இணைத்தலைவர் டி.எம்.சந்திரபால, பிரதேச செயலாளர் வாசுதேவன், உதவிபிரதேசசெயலாளர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், அரசசார்பற்ற அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசத்தின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## நல்லாட்சிக்கு பாடுபட்டோரின் நம்பிக்கையைச் சிதைக்காதீர்

### முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு அறிக்கை

"நல்லாட்சி அரசை எத்தகைய நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் சிறுபான்மை சமூகத்தவர்கள் ஆட்சிபீடம் ஏற பாடுபட்டு வெற்றி கண்டனரோ, அத்தகைய எதிர்பார்ப்புக்களையும், நம்பிக்கையையும் சிதைக்கும் வகையிலான சம்பவங்கள் முளைவிட்டு வருகின்றன".

இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் கவலை வெளியிட்டள்ளது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இனம் தெரியாதோரின் தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்தும், கவலை வெளியிட்டும் இந்த ஊடக அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

"கடந்த மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு பௌத்த மேலாதிக்கவாத, இனவாத சம்பவங்களால் பெருந்துயரும், அச்சமும் கொண்டிருந்தனர்.

அன்றைய ஆட்சியாளரின் கண்டும் காணாத செயற்பாடுகளால் சிறுபான்மையினர் மீதான இனவாத செயற்பாடுகள் உரமூட்டி வளர்க்கப்பட்டன.

குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்கள் பல தாக்கப்பட்டன. அத்துடன் முஸ்லிம்களின் மதசுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவந்தன. பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சில பிர தேசங்களில் முஸ்லிம்களின் மதஸ்தலங்கள், பள்ளி வாசல் கள் தாக்குதலுக்குள்ளாகி வந்தன.

பொதுபலசேன போன்ற அமைப்புக்களின் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் அன்று ஊக்குவிக்கப்பட்டன.

இந்தக் கசப்பான நிலைமைகளுக்கு விடிவு காண வேண்டும் என்ற வேட்கையுடனேயே அபரிமித நம்பிக்கையுடன் சிறுபான்மைச் சமூகங்கள் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதில் பெரு முனைப்புக் காட்டி அதில் வெற்றியும் கண்டனர்.

இதனால், மலர்ந்த நல்லாட்சியில் சிறுபான்மை மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் சிதைவுறும் வகையில் இனவாத சம்பவங்கள் இன்று முளைவிட்டுவருகின்றமை கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பௌத்தர்களே வாழாத அம்பாறை மாவட்டத்தில் பழம்பெரும் தமிழ்க்கிராம மலையில் அத்துமீறி புத்தர் சிலை நிறுவிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இதேவேளை குருநாகல் மாவட்டத்திலுள்ள சிறுபள்ளிவாசல்கள் இனம் தெரியாதோரின் தாக்குதல்களுக்கு உள்ளாகி யுள்ளன. இறுதியாக நிக்கவரெட்டிய நகர ஜூரம் ஆ பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மிலேச்சத்தனமான இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நல்லாட்சி அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து இனவாத செயற்பாடுகளை ஒழித்துக்கட்டவேண்டும். இல்லாவிடில் மஹிந்த அரசு போல் இன்றைய நல்லாட்சியும் சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ– 150)

## தொடரும் பணிப் புறக்கணிப்பு...




யாழ். மாநகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இரண்டாம் நாளாக நேற்றும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10 வருடங்களாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் தங்களை நிரந்தரமாக்கக் கோரி நேற்று முன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட தங்களை மக்கள் பிரதிநிதிகள் எவரும் சந்திக்கவில்லை என்று அவர்கள் கூறினர்.

தங்களுக்கான உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்துவோம் என்றும் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். (இ-10)

## மும்மொழிச் சங்கங்கள் இனி சகவாழ்வுச் சங்கம்

### பெயர் மாறினாலும் செயற்பாடு ஒன்றே

வலி.மேற்கு,நவ.09

யாழ்.மாவட்டத்தின்பல்வேறு பகுதிகளிலும் இயங்கி வந்த மும்மொழிச் சங்கங்கள் தற்போது புனரமைக்கப்பட்டு சகவாழ்வுச் சங்கம் என்ற புதிய பெயருடன் இயங்கவுள்ளது.

இதற்கான பணிப்புரைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி சங்கம் இதுவரை காலமும் மேற்கொண்ட மும்மொழிபயிற்சி மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். எனினும் இதன் பெயர் மட்டுமே மாற்றமடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக இச் சங்க நிர்வாகிகள் தமது பகுதி பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டுதேவையான ஏற்பாடுகளைச்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கின்றனர். (இ-53)



மரநடுகை மாதத்தை முன்னிட்டு வடமராட்சி கப்பூது பகுதியில் நேற்று முன்தினம் மரக் கன்றுகள் நடப்பட்டன. கரவெட்டிப் பிர தேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இணைந்து மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். (ம - 40)

## வலி. வடக்கில் இரும்பு திருடியவருக்குப் பிணை

தெல்லிப்பழை, நவ.09

வலி. வடக்கு உயர் பாது காப்பு வலயப் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தையிட்டிப் பகுதியில் பழைய இரும்புகளைத் திருடிய குற்றச்சாட்டில் கைதான லொறிச் சாரதிக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அவரை 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் நேற்று முன் தினம் உத்தரவிட்டார்.

வழக்கை எதிர்வரும் ஜன வரி மாதம் 04 ஆம் திகதிக்கு தவணையிட்டார்.

தையிட்டிப் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிக்குள் அத்துமீறி நுழைந்து, பழைய இரும்புகளைச் சேகரித்த லொறிச் சாரதியை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவரை நேற்று முன்தினம் மல்லாகம் நீதிவான் ஏ.யூட் சன் முன்னிலையில் முற்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியலில்

மல்லாகம், நவ.09

மாதகல் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 55 கிலோ கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளவாலைப் பொலிஸாரால் கைதான சந்தேக நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் ரீ.கருணாகரன் உத்தரவிட்டார்.

பொலிஸ் காவலில் வைக் கப்பட்டு விசாரணைக்கு உட் படுத்தப்பட்ட சந்தேக நபர் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டபோதே இந்த உத்தரவை நீதிவான் விடுத்தார். (இ-9)

### கௌரவிப்பு விழா

கோண்டாவில்சி.சி.த.க.பாட சாலையின்2016ஆம்ஆண்டுக் கான கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமைகாலை9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறும். பாடசாலை அதிபர் திரு மதி. சி.நந்தகுமார் தலைமை யில்நடைபெறும்இந்நிகழ்வில் படையமாணவரும்,வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரு மான சி.தவராசா நல்லூர் கோட் டக்கல்விப் பணிப்பாளர் எவ்.எச்ஸ் அன்ரன் ஆகியோர் பிரதம விருந்தினரர்களாகக் கலந்துகொள்வர். கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப் பின் தலைவர் செ.ஜெகபாலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### சாரதிகளுக்கு அபராதம்

போக்குவரத்து விதிமுறையை மீறி வாகனம் செலுத்திய சாரதி கள் மூவருக்கு 17 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் நேற்றுமுன்தினம்தீர்ப்பளித்தார்.

காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய வருக்கு 5 ஆயிரம் ரூபா, சாரதி அனுமதிப்பத்திரம்இன்றிசென்ற வருக்கு 3 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்த நீதிவான், மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி அபாயகரமான முறையில் வாகனம் செலுத்திய ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (இ-9)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சை ஆரம்பம்!

## இதுவரை 200 இற்கும் மேற்பட்டோர் பதிவு






யாழ்ப்பாணம், நவ.09

கொழும்பு-கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் நேற்று இலவச பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் அமுதா கோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் வைத்தியர் லயன் வை.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஆரம்ப நிகழ்வில் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர்யோ.திவாகர், தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.கிரிதரன், கொட்டாஞ் சேனை வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள், அமெரிக்காவில் இருந்து வந்த மருத்துவக் குழுவினர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நேற்று ஆரம்பமாகிய இந்த இலவச பிளாஸ்ரிக் சிகிச்சைக்கு இதுவரை 200 இற்கும் மேற்பட்டோர் பதிவுகளைச் செய்துள்ளனர்.

இந்த இலவச சிகிச்சையைப் பெறுவதற்காக நேற்றுவரை பதிவு செய்தவர்களில் வடமாகாணத்துக்கு வெளியே - அதாவது, புத்தளம், கொழும்பு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் நோயாளர்கள் வருகை தந்திருந்தமை குறிப் பிடத்தக்கது. டி சத்திர சிகிச்சைகள் தொடர்ந்து இன்று புதன்கிழமையும்நாளைவியாழக் கிழமையும் நடைபெறவுள்ளன.

சத்திரசிகிச்சைக்கு வருகை தந்தோரில் பலர் யுத்தத்தால் காயப்பட்டோர்மற்றும் தீக் காயங் களுக்கு உட்பட்டோர் என்று என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ

# அவயவங்களை இழந்த போராளிகள் பொதுமக்களுக்கும் வேண்டும் நீதி

## ஜனாதிபதி முன்வருவாரா எனக் கேட்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

வவுனியா, நவ.09

போரால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்துள்ள முன்னாள் பேராராளிகள் மற்றும் பொது மக்களுக்கும் சம நீதி வழங்க ஜனாதிபதி முன்வர வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த நாட்டில் முப்பது வருடகாலமாக யுத்தம் நடைபெற்றது. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற பெயரால் அது மௌனிக்கப்பட்டு தற்போது ஏழரை ஆண்டுகள் ஆகின்றன. இந்த யுத்தத்தில் தமிழ் மக்கள் இழந்த இழப்புக்கள் ஏராளம். அவற்றுக்கு ஈடு இணையாக எந்த விதமான நிவாரணத்தையும் எப்போதுமே வழங்க முடியாது என்பது நிதர்சனமான விடயம்.

அவ்வாறிருக்கையில் இந்தக் கொடிய யுத்தத்தினால் அவயவங்களை இழந்தும், சுயாதீனமாக தனது அடிப்படை வேலைகளைக்கூடச் செய்ய முடியாத குறிப்பாக – முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட – நூற்றுக் கணக்கானவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கின்றார்கள். வன்னி தேர்தல் மாவட்டத்தில் இவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

இவர்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் அரசால் உதவிகள் வழங்கப்படுவதற்காகவும், தனியார் தொண்டுநிறுவனங்கள் உதவிகளைச் செய்வதற்காகவும் கிராம அலுவலர்கள் ஊடாக திரட்டப்பட்டுள்ளன.

### வெறும் ரூ.3 ஆயிரம் மட்டும் போதுமா?

இவ்வாறு இன்னொரு நபரின் துணையுடன் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தங்கிவாழும் தேவையுடைய இவர்களுக்காக வெறுமனே மூவாயிரம் ரூபா கொடுப்பனவு மட்டுமே அரசால் தற்போதுவரையில் வழங்கப்பட்டு வருகின்றது. இது கூட பாதிக்கப்பட்டிருக்கும் எல்லோருக்கும் வழங்கப்படவில்லை. தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கியிருந்தாலும் அது தொடர்ச்சியானதாக இல்லை.

தற்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நல்லாட்சியை நிலை நிறுத்துவற்காக தங்கள் தலைமையிலான அரசு பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக நாம் உணர்கின்றோம். அண்மையதினங்களில் கூட யுத்தத்தில் ஈடுபட்டு மாற்றுத் திறனாளிகளாக உள்ள இலங்கை இராணுவத்தினர் 25 கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தனர்.

### தமிழர் தரப்புக்கும் அதே பாதிப்புத்தானே!

அந்தப் போராட்டத்தின் ஈற்றில் அவர்களுக்கான ஓய்வூதியத் தொகை அதிகரிப்பு உள்ளிட்டவற்றுக்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளதை அடுத்து போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளனர்.

யுத்தத்தில் அழிவுகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நவீனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்ட அரச தரப்பிற்கே இவ்வளவு பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றால் அதைவிடவும் குறைவான பலத்துடன் போராடிய தமிழ்த் தரப்பிற்கு எந்தளவிற்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை தாங்கள் நன்கறிவீர்கள்.

இதை விடவும் எதுவித ஆபத்தையும் எதிர்பாராது உயிரைப் பாதுகாப்பதற்காக அங்கும் இங்கும் ஓடிய அப்பாவிப் பொதுமக்களும் இதில் அகப்பட்டு பெரும் பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளார்கள் என்பதையும் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

மேலும், இராணுவ வீரர்கள் போன்று தமிழர் தரப்பில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வீதிக்கு வந்து தமது வாழ்வாதாரத்துக்காக போராடக்கூடிய ஏதுவான நிலைமையில் கூட இல்லை. அதற்கு கூட பிறிதொரு நபரின் உதவியையே அவர்கள் நாடி நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையில் தான் உள்ளார்கள்.

எனவே, மனிதாபிமானத்தை கருத்திற்கொண்டு இத்தகையவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை கிரமமாக வழங்கி பராமரிப்பதற்குப் பொதுவான பராமரிப்புநிலையமொன்றைவன்னி



பிரதேசத்தில் அமைப்பதற்குரிய நடவடிக்கையை தாங்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், தற்போது பெற்றோர் உட்பட உறவினர்களின் துணையுடன் வாழ்ந்து வரும் இவர்களுக்கும் – இராணுவத்திலிருந்து ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற சகல உரிமைகளையும் தமிழ்த் தரப்பினர்களுக் கும் (ஊனமுற்றவர்களுக்கும்) வழங்கி நீதியை நிலை நாட்டுவீர்கள் என தமிழர்களின் சார்பில் எதிர்பார்க்கின்றேன். நிரந்தரமான மாதாந்த கொடுப்பனவொன்றை வாழ்வாதார செலவீனங்களுடன் ஒப்பிட்டு நியாமானதாக வழங்குவதற்குரிய நடவடிக்கையையும் துரிதமாக எடுக்கவேண்டியது நீதியான செயலாகும் எனத் தெரிவித் துள்ளார். (100)

# முல்லைத்தீவு மீனவரின் தொழில்முறை நவீனத்துவத்துக்கு மாற வேண்டும்

## அதன் மூலமே அதிக வருமானம் பெறலாம் என்கிறார் சமாசத் தலைவர்

முல்லைத்தீவு, கடற்றொழிலாளர்களின் படகுகளையும், உபகரணங்களையும் நவீன முறைக்கு மாற்றுவதன் ஊடாகவே, மீன்பிடியில் அதிக வருவாயை எட்டமுடியும்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா இவ்வாறு தெரிவித்தார்.

40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தொழில் முறையையே தற்போதும் நாம் கையாள்கின்றோம். எமது படகுகளின் இயந்திரவலு அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கான அனுமதிகள் உள்ள போதும் இயந்திரங்களை பொருத்தக்கூடிய பொருளாதார நிலை கடற்றொழிலாளர்களிடம் இல்லை.

இதனால், 40 கடல் மைல் தூரம் வரை சென்று தான் மீன்பிடியில் ஈடுபடுகின்றோம்.

இயந்திரவலு அதிகரிக்கப்பட்டு, ஜி.பி.எஸ் போன்ற கருவிகள் படகுகளில் பொருத்தப்படும் போது, 100 மைல் தூரம் வரையில் சென்று தொழிலில் ஈடுபடக்கூடிய நிலைமை ஏற்படும்.

பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், நவீன படகுகள், உபகரணங்களைப் பயன்படுத்தித் தான் எமது கடல் பகுதிக்கு வந்து சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள்.

எங்களிடம் தொழில் வல்லமை அதிகரிக்கும் போது தான் எமது பொருளாதார பலமும் அதிகரிக்கும் – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)




வவுனியா – தமிழ் விருட்சம் ஊடாக சின்னத்தம்பி நற்பணி மன்றம் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளது. முல்லைத்தீவு சாயி இல்லத்தில் வைத்து சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஐ - 81)

# முல்லை இனியவாழ்வு இல்ல மாணவருக்கு புத்தாடைகள்



வட்டு. இந்து வாலிபர் சங்கத்தால் தீபாவளி தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட இனிய வாழ்வு இல்ல மாணவர்களுக்கு புத்தாடைகள் மற்றும் உணவுகள் வழங்கப்பட்டன.

புலம்பெயர் உறவான லண்டனைச் சேர்ந்த பரஞ்சோதி லோகஞானம் தமது தந்தை பரஞ்சோதி மற்றும் தங்கை ராஜேஸ்வரி பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இல்ல மாணவர்களுக்கு சுமார் ஒரு லட்சத்து 13 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தாடைகளையும் வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினர் ஊடாக அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ஐ)

## வைத்தியசாலையிலும் நுளம்புக் கடி !

நெளுக்குளம், நவ.09

வவுனியா நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலையில தங்கி சிகிச்சை பெறுவோர் தாங்கள் நுளம்புக்கடியால் அவதிப்படுகின்றனர் என்று முறையிடுகின்றனர்.

நோயாளர் விடுதியில் 40 கட்டில்கள் வரை இருந்தும் நுளம்பிலிருந்து பாதுகாக்கும் அடிப்படைவசதிகள்கூட இல்லை என்றும் வெறும் நுளம்பு வலை கூட வழங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

மழைக்காலம் ஆரம்பித்திருப்பதால் வழமையைவிட தற்போது நுளம்புப் பெருக்கம் திடீரென அதிகரித்துள்ளது என்றும் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இதனைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர் என்றும் நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர். (இ-12)

இணுவையூர் பதஞ்சலி நவேந்திரன்

# மனதைத் தொட்ட 3 in 1 அரங்கேற்றம்





20-வது அல்லது 25-வது வருடங்களிற்கு முன் லண்டனில் நடந்த அரங்கேற்றங்கள் பல பரிமாண மாற்றங்களை கண்டு இன்று பிரமிக்கத்தக்க வகையில் முன்னேற்றங்களை கண்டிருக்கிறது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஒக்ரோபர் 1-ம் திகதி லண்டன் லோகன் மண்டபத்தில் நடந்த பிரியங்கா, ரம்மியனின் வாய்ப்பட்டு, மிருதங்கம், புல்லாங்குழல் அரங்கேற்றம்.

*Oriental Fine Arts Academy of London (OFAAL)* என்ற நுண்கலைப் பரீட்சை நிலையத்தில் நான் *Hon. secretary* யாக இருப்பதால் லண்டனில் நடக்கும் அதிகமான எல்லா அரங்கேற்றங்களிற்கும் அழைப்பிதழ் வரும். இந்த அரங்கேற்றத்தைப் பற்றி எழுத இதில் இருந்த பல சிறப்பு அம்சங்கள் என்னைத் தூண்டியதே இக்கட்டுரையின் விளைவு.

முதல் அம்சம் கேசவன் என்ற ஒரு சமூகத்தொண்டன் *Oriental Fine Arts Academy of London (OFAAL)* என்ற பரீட்சைத்தாபனம் பாரிய வளர்ச்சி அடையத் தொடங்கிய 2000 ஆண்டு காலப்பகுதியில் இருந்து இன்றுவரை எமது பரீட்சைக்கு கைகொடுத்து வருபவர்.

கேசவன் *OFAAL* இல் மட்டுமன்றி ஈலிங் கனகதுர்க்கை அம்மன் கோவிலோடும் மிக நெருக்கமான தொடர்புடையவர். தற்போது இவர் அங்கே காரியதரிசி. ஆனால், காரியதரிசியாக வருவதற்கு முன்பே மிகச் சாதாரண அடிப்படைத் தொண்டன்.

'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.'

என்ற வள்ளுவனின் குறளிற்கு இலக்கணமாக நிற்பவர் கேசவன்.

பிரியங்காவின் வாய்ப்பட்டு ஆசிரியர் இசைக்கலைமாமணி சுகிர்தகலா கடாட்சம். அமைதியாக இருந்து பல சாதனைகளிற்குச் சொந்தக்காரி இவரின் கலைத்திறமையை ஒக்ரோபர் 1-ம் திகதி பிரியங்காவினூடாக வெளிப்படுத்தியிருந்தார். இத்தனை வருடங்கள் படித்தால் அரங்கேற்றம் செய்யலாம் என்றெல்லாம் இவரிடம் சட்டம் கிடையாது. அரங்கேறும் தராதரம் வராவிட்டால், அரங்கேற அனுமதியே கொடுக்கமாட்டார். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பார்கள். இவருடைய உருப்படித் தெரிவுகளில் ஒன்றாக 'சூரியா' இராகத்தில் அமைந்த லலித்த சிவகுமாரனின் பாடல் மிகச் சிறந்த உதாரணம். சூரியா இராகம் ஹிந்தோள இராக சாயல் உள்ளது. நுணுக்கமாகக் கையாண்டால் தவிர, சூரியா இராகத்தை பாடுவது மிகக் கடினம். இந்த இராகப்பாடலை பிரியங்கா சிறப்பாகப் பாடினார் என்றால் அதன் மூல காரணி சுகிர்தகலா என்ற ஆசிரியரே. சுகிர்தகலா நான் சார்ந்த *OFAAL* நிர்வாகத்தின் 100% ஆதரவாளர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



மிருதங்க ஆசிரியர் பத்மநாதன்- ஒரு கலைஞராக அல்ல, எப்படி ஒரு மனிதராக இருக்க வேண்டும் என்ற இலக்கணத்திற்கு மிகப் பொருத்தமானவர் பத்து என்று



அன்பாக அழைக்கப்படும் பத்மநாதன் ஆசிரியர் தமிழ்நாடு அரசின் சிறப்புப்பட்டமான 'கலைமாமணி' விருது பெற்றவர். ரம்மியன் என்ற குழந்தை மனமுடையவரை, மிருதங்க அரங்கேற்ற நிலைக்குத் தயார் பண்ணியதே 'பத்து'வின் சாதனைக்கு ஒரு சான்று. இவரின் குரு கோடையிடி கோவிந்தராயுலு. பேரிற்கேற்ப பத்துவின் மிருதங்க வாசிப்பு கோடையிடியாக பரிணமித்ததில் எந்த ஆச்சரியமுமில்லை. பத்து *MASTER OFAAL* தமிழ்ப் பாடசாலையின் மிருதங்க ஆசிரியர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



புல்லாங்குழல் ஆசிரியர் பிச்சையப்பா ஞானவரதன். இவர் ஒரு இசைக்குடும்பத்தில் இருந்து வந்தவர். இவர் தகப்பன் இலங்கை வானொலி புகழ் *TV* பிச்சையப்பா ஞானி *MASTER* இன் 33 ஆவது அரங்கேற்றம்; வாத்தியக் கருவிகளிலே, நாதஸ்வரத்திற்கு அடுத்ததாக கருதப்படக்கூடிய கம்பீர வாத்தியத் தகுதி புல்லாங்குழலுக்குண்டு. மகாமேதை லால்குடி ஜெயராமின் நளின காந்தி அமைந்த, விறுவிறுப்பான வர்ணத்தில் தொடங்கி, மிருதங்க மேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியின் கேமவதில் அமைந்த இராகம், தானம், பல்லவியில் ரம்மியனை மிளிர் வைத்த குரு இந்த ஞானி.

விழாவின் பிரதம விருந்தினர் மிருதங்க மேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி, சிறப்பு விருந்தினர் *OFAAL* நிறுவனத்தின் பரீட்சை முதல்வர் ஜெயஅழகி அருணகிரிநாதன்.

ஒரு அரங்கேற்றம் செய்வதே ஒரு பாரிய முயற்சியாக இருக்கும் போது, மூன்று பெரிய வித்துவான்களை உள்ளடக்கி மூன்று அரங்கேற்றங்களை ஒன்றாக மேடையேற்றியதற்கு பெற்றோர் திரு. திருமதி கேசவனுக்கு ஒரு சபாஷ் போடலாம். மற்றைய பக்க வாத்தியக் கலைஞர்களான வயலின் வித்துவான் பாலு ரகுராம், கடம் ஆர்.என்.பிரகாஷ் பற்றி குறிப்பிடாமல் விட்டால் பெரிய தவறு செய்தவன் ஆவேன்.

மிகச்சிறந்த வயலின் வித்துவான்களில் முன்னிலையில் இருப்பவர்களில் ஒருவர் பாலு. கண்களை மூடி இவர் வாசிப்பைக் கேட்டால், வயலின் மாமேதை லால்குடி ஜெயராம் வாசிப்பது போல் இருக்கும். அடுத்தது கடம் பிரகாஷ் என்று அழைக்கப்படும் பெங்களூர் பிரகாஸ் இவரது சிறப்பு வாத்தியம் கடமாக இருந்தாலும், அன்று இவர் வாசித்தது கெஞ்யீரா. கடமோ, கெஞ்யீராவோ எதுவாயினும் இவருடைய வாசிப்பே ஒரு தனிப்பாணி!

இறுதி சிறப்பம்சம் - மேலைநாட்டிலே பிறந்து வளர்ந்த எமது அடுத்த தலைமுறை இளம் கலைஞர்களை பாவித்து ஊக்கப்படுத்தியதுதான். கடம் வாசித்த அருள் ஞானப்பிரகாசம் மிகச்சிறப்பாக வாசித்து தனது குரு பரமசாமி கிருபாகரனுக்கு பெருமை சேர்த்துள்ளார். அதேபோல மோர்சிங் வாசித்த துஷான் தர்மதுரை தனது குருவான சோமசுந்தரதேசிகருக்கு பெருமை சேர்த்துள்ளார். தம்புரா வாசித்த ரேணுகா சிவம் எமது இரண்டாம் தலைமுறையில் உருவாகிய மிகச்சிறந்த வயலின் வித்தகர்.

பலவகைகளில் சிறப்பு அரங்கேற்றம் இது என்றால் அது மிகைப்படக்கூறிய தொன்றாகாது.

**நன்றி: 'புதினம்' சஞ்சிகை லண்டன்**





ஜேர்மனி , நொய்ஸ் மற்றும் தலைநகர் பேர்லினில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் 9ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு மிக உணர்வுபூர்வமாக நடைபெற்றுள்ளது. புலம் பெயர் தமிழ் மக்களால் மலர் தூவி, சுடர் வணக்கம் செலுத்தப்பட்டது. அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



ஸ்ரீலங்காவை இன்று ஆளும் கூட்டரசாங்கக் குழந்தையின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் தமிழ்த்தேசத் தாயின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாக இருக்கும் போது, அந்தக் குழந்தையின் ஆரோக்கியமும் முன்னேற்றமும் யாருக்கெல்லாம் அவசியமாய் உள்ளதோ, அவர்கள் இந்த தமிழ்த் தேசத் தாய் குழம்பிவிடாமல் இருப்பதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். செய்யத் தான் வேண் டும். ஆனால், அது, அவ்வாறு அவள் குழம்பிவிடுவாள் என்றோ, அல்லது ஏற்கெனவே குழம்பத் தொடங்கி விட்டாள் என்றோ ஒரு பீதி ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே சாத்தியமாகும்.

அத்தகைய பீதியை ஏற்படுத்தவல்லது தான் தமிழ்த் தேசத்தின் சாதுர்ய வலு. ஆனால், சிக்கல் எங்கு வந்தது எனில் –

# ஊக்கமது கைவிடேல்

தமிழ்த் தேசத்தின் இந்த இன்றியமையாத் தன்மை கொண்ட அரசியல் மகத்துவத்தைச் சரிவரப் பயன்படுத்தி – சாதுர்யவலுவைப் பிரயோகித்து – எமக்கே உரித்தான அடிப்படை உரிமைகளை வலியுறுத்திப் பெற்றுக்கொள்ளத் தவறுகின்றது இரா. சம்பந்தனின் கட்சி. தரக்கூடியதைத் தாருங்கள்; ஒரு வீதம் தந்தாலும் பரவாயில்லை; நாம் உங்கள் கூட்டரசாங்கத்தைப் பாதுகாத்துத் தருகின்றோம் என்று கீழிறங்கி – தரம் தாழ்ந்து – போய்க்கொண்டேயிருக்கிறார்கள் தமிழ் தலைவர்கள். அதே வேளையில் – மறுபுறத்தில் – சிங்களத் தலைவர்களோ – தமது மென் வலுவைப் பாவித்துத் தமிழர் தலைவர்களுக்குப் பதவிகளையும் படாடோபங்களையும் வழங்கியும், தமது வன் வலுவைப் பாவித்து அவர்களுக்கு இன்ன பிறசலுகைகளை வழங்கியும் – தமிழர்களை இப்போது தமது சாதுர்ய வலுவால் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டார் கள். குறிப்பாகச் சொன்னால் – சொல்லுவதற்கெல்லாம் தலையாட்ட வைத்துவிட்டார்கள். தமிழ் தலைவர்களை வைத்தே, தமிழ் தேசத்தவர்களைச் ஸ்ரீலங்கர்களாக சிந்திக்க வைக்கும் மாற்றத்தைச் சிறுகச் சிறுக ஏற்படுத்திவருகின்றார்கள். இப்படியே போய்க்கொண்டிருக்குமானால் – ஆகக் கடைசி ஆராய்வில் வரப்போகும் முடிவு என்னவெனில் – ஒருபுறத்தில் இந்த மென் வலு, வன் வலு, சாதுர்ய வலு பற்றியெல்லாம் நாம் வெறுமனே வியாக்கியானங்கள் கொடுத்துக் கொண்டிருக்கையில் – உண்மையில் இவை எல்லாவற்றையும் ஒரேயடியாகப் பிரயோகித்து, மீண்டுமொருமுறை தமிழினத்தை ஏமாற்றித் தமது காரியங்களைச் சாதித்து முடித்த வல்லவர்கள் சிங்களத் தலைவர்களே என்பதாகும்.

அத்தகைய முடிவினை மாற்றுவதற்கான வழி தமிழ்த்தேசம் சாதுர்யமாகச் சிந்தித்துச் செயலாற்றுவதுதான்.

தமிழர்களிடத்தில் இன்னமும் வன்சக்தி உண்டு. எவற்றையெல்லாம் வைத்துப் பேரங்கள் பேச முடியுமோ, அவை எல்லாமேதான் வன்சக்தி. எம்மிடம் உள்ள அந்த வன்சக்தியின் காரணமாகத்தான், இன்றைய கூட்டரசாங்கத்தின் பிறப்பில் நாம் தாயாகப் பங்களிக்க வேண்டி வந்தது. ஆனால், பேரங்கள் பேசாமல் வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் எமது பங்களிப்பை அப்போது வழங்கியிருந்தோம் என்பது வேறு கதை. எமது அந்த வன்சக்தி – ஒவ்வொரு தமிழ் மகனிடமும் மகளிடமும் இருக்கும் வாக்குரிமையும், அந்த வாக்குகள் மூலமாக நாம் பெற்றுள்ள தமிழ் நாடாளுமன்ற ஆசனங்களும் ஆகும்.

அதே போன்று, தமிழ்த் தேசத்திடம் இருக்கும் பிறிதொரு வன்சக்தி – மக்கள் இயக்கங்களும், அவற்றின் தலைமைகளும், அவற்றின் செயற்பாடுகளும் ஆகும். தமிழர்களை ஏமாற்ற எண்ணுபவர்கள் எவற்றையெல்லாம் கண்டு பயப்படுகின்றார்களோ, எவற்றின் தாக்கங்களால் தமது நோக்கத் திட்டங்களை மாற்றியமைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றாகளோ – அவை எல்லாமே வன்சக்தி. தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புக்கள், அவறுக்குத் தலைமையேற்க முன்வந்த விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்ற மனிதர்கள், தமிழ் தேசத்தின் இறைமையை வலியுறுத்தி அவை முன்வைக்கும் தீர்வுத் திட்டங்கள், அந்த தீர்வு திட்டங்களின் அடிப்படையில் அவை முன்னெடுக்கும் 'எழுக தமிழ்!' போன்ற மக்கள் பேரணிகள் என எல்லாமே – தமிழர்களை ஏமாற்ற எண்ணுபவர்களைப் பதற வைக்கும் தமிழ்த் தேசத்தின் வன்சக்தி.

03



**சம்பந்தன் ஐயாவின் கட்சிக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பித் தமிழ்த் தேசம் வழங்கிய ஆணை- என்னவிதத்திலாவது தனது இறைமையை மீட்டெடுக்கும் படியாகவே அல்லாமல், மீண்டுமொரு முறை தாம் ஏமாற்றப் பட்டதான செய்தியைக் கொண்டு வரும்படியாக அல்ல. அவ்வாறான ஒரு செய்தியோடுதான் நாளை அவர்கள் வருவார்களெனில் இன்று அவர்கள் மௌனமாக இருப்பதற்கான காரணம் நக்குண்டு நாவிழந்ததே என்றுதான் நாளைய வரலாறு எழுதும்.**

தமிழ்த்தேசத்திடம், மிகப் பலமான மென்வலுவும் இருக்கின்றது. மென்வலு எனப்படுவது, தமிழ்த் தேசத்துக்கு மாறானவர்களையும் தமிழர் நலனில் அக்கறை கொள்ள வைக்கும் கவர்ச்சி. எம்மை வெறுக்காமல் எம் மீது அவர்களை நம்பிக்கை கொள்ளவைக்கக்கூடிய ஈர்ப்பு. எங்களுக்கு மாறான தங்களுடைய நிலைப்பாடுகளை மீறியும், நாங்கள் வேண்டுவதைச் செய்வதற்கு, ஏதோ ஒன்று அவர்களைத் தூண்ட வேண்டும். அவ்வாறு அவர்களைத் தூண்டவல்லதாக எம்மிடமிருப்பதுதான் மென்சக்தி. கொழும்பு ஆட்சியாளர்களின் மனதைப் புண்படுத்திவிடக்கூடாது என்ற அவதானத்துடன் – நிதானமாகவும், கொழும்புக் கூட்டரசாங்கத்தை குழப்பிவிடக்கூடாது என்ற பக்குவத்துடன் – கவனமாகவும், கொழும்பு ஆட்சியாளர்களுடைய அன்பையும் நம்பிக்கையையும் பெறுவதற்காக – பொறுமையாகவும் செயற்படுவதால், இன்றிருக்கும் எந்த ஒரு தமிழ் அரசியலாளரை விடவும், சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனுமே கொழும்பால் விரும்பப்படுகின்ற தலைவர்களாகத் திகழ்கின்றார்கள். அதனால், அவர்களே. இன்று. தமிழ்த் தேசத்தின். மென்சக்தி.

தமிழ்த்தேசத்தின் இந்த வன்வலுவையும், மென்வலுவையும் பொருத்தமான விகிதாசாரத்தில் சாதுர்யமாகக் கலந்து பிரயோகிப்பது எவ்வாறு என்பதுவே எம் முன்னால் உள்ள கேள்வி.

ஸ்ரீலங்கா நாட்டுக்காக எழுதப்படுவதாகச் சொல்லப்படுகின்ற புதிய அரசமைப்பு யாப்பில் மூன்று விடயங்களில் கவனம் செலுத்தப்படுவதாகச் சொல்லப்படுகின்றது:

(1) நிறைவேற்று ஆட்சியதிபர் முறைமையை நீக்குவது;

(2) தேர்தல் முறைமையை மாற்றியமைப்பது;

(3) தமிழர் பிரச்சினைக்குத் தீர்வான அதிகாரப் பகிர்வினைச் செய்வது.

ஆனால், அறியக் கிடைப்பவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவெனில் – முதலிரண்டு விடயங்களிலும் தத்தமக்கிருக்கும் சாதக பாதகங்கள் தொடர்பில் மட்டுமே கவலைப்படும் ரணிலும் மைத்திரிபாலவும், மூன்றாவது விடயத்தைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. ஏதோ ஒரு வகையில் – இந்த மூன்றாவது விடயத் தைத் தொடாமலேயே, முதலிரண்டு விடயங்களில் மட்டுமே இணக்கப்பாட்டுக்கு வந்து, புதிய அரசமைப்பை உருவாக்கி முடித்துவிட அவர்கள் முயற்சிக்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் செய்திடுவார்களெனில் – இந்த கூட்டரசாங்கக் குழந்தையைப் பெற்றெடுத்து, ஏதோ ஓர் எதிர்பார்ப்பில் இன்றுவரை அதற்கு நிபந்தனையற்ற அரவணைப்பைக் கொடுத்துவரும் தமிழ்த்தேசத்துக்குக் கிடைக்கப் போவது எதுவுமே இல்லையா?

எழுதப்படுகின்ற இந்த அரசமைப்பு யாப்பினைத் தமிழ் மக்களிடம் தாம் எடுத்து வருவோம் என்கிறார் சம்பந்தன் ஐயா. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத எத்தகைய தீர்வினையும் தனது கட்சி ஏற்றுக் கொள்ளாது என்கிறார் அவர். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், தமிழ் மக்களோடு சேர்ந்து, அந்தத் தீர்வு யோசனை மீது நிகழ்த்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பின்போது, அதற்கு எதிராகத் தமது கட்சியும் வாக்களிக்கும் என்றும் சொல்லுகிறார் ஐயா. ஆனால், கேள்வி என்னவெனில் – தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்ட பின்பு ஐயாவின் கட்சி என்ன செய்யும் என்பதல்ல; மாறாக – தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதான ஒரு தீர்வைப் பெற்றெடுப்பதற்கு ஐயாவின் கட்சி இப்போது என்ன செய்கின்றது என்பதேயாகும். இவ்வளவு காலமும் கூட்டரசாங்கத்தோடு அரவணைத்துக் கிடந்ததன் பெறுபேறு – வெறுமனே, எதிர்க்கட்சி தலைவர், மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்கள் என்ற பதவிகள் மட்டும்தானா? தமிழ்த் தேசத்துக்கு மிஞ்சப் போவது – இன்னுமொரு தடவை சிங்கள தேசத்தால் ஏமாற்றப்பட்டார்கள் என்ற அவப்பெயர் மட்டும் தானா?

இந்த கூட்டரசாங்கக் குழந்தையைப் பிரசவிப்பது தமிழ்த் தாய் ஏற்றுக் கொண்ட ஒரு தற்காலிகப் பணி. வாடகைத் தாய் பணிக்கான உடன்பாடு இதயங்களில் எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. குழந்தையைப் பிரசவிப்பதற்கான பிரதியுபகாரமாகத் தமிழ்த் தாயின் இறைமை அங்கீகரிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. அது நம்பிக்கையின் அடிப்படையிலான உடன்பாடு என விவரிக்கப்பட்டது. ஆனால், இப்போது, வெறுமனே சலுகைகளுடனும் வசதிகளுடனும் மட்டுமே கழற்றிவிடப்படக்கூடிய ஏது நிலைகள் தெரிகின்ற போது – இனியாவது நாம் பேரங்கள் பேசத் தொடங்க வேண்டும். இதயங்கள் நேர்மையாகச் செயலாற்ற மறுக்கின்ற போது, மூளையைக் களத்தில் இறக்கி சாதுர்யமாகச் செயலாற்ற வேண்டும். எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வைத் தருகின்றார்கள் என்று பின்னர் புலம்புவதற்குப் பதிலாக, ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வை முன்னரே உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கினால் மஹிந்த ராஜபக்ஷ சிங்களவர்களைக் குழப்புவார் என்று கொழும்பு சொல்லுமானால், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படாதவிடத்து விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமாரும் தமிழர்களைக் குழப்புவார்கள் என்று திருப்பிக் கூறும் திராணி இருக்க வேண்டும். எழுக தமிழ்! போன்ற பேரணிகளால் சிங்களவர்கள் பிரச்சினைப்படுகின்றார்கள் என்று கொழும்பு கூறுமானால், முதலில் பிரச்சினைப்பட்டுப் பேரணி போனது தமிழர்கள் அல்லர் என்பதை உரைக்கும் துணிவு இருக்க வேண்டும். தமிழ் அரசியலைத் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல கொழும்புக்கும் பிற நாடுகளுக்கும் பாசாங்கு செய்யாமல், உரியதை உரிய முறையில் கொழும்பு செய்யாதவிடத்து, தமிழ்த்தேசத்தில் விடயங்கள் கைமீறிப் போகும் என்று பயமுறுத்தும் திணாவெட்டு இருக்க வேண்டும். இதயபூர்வ உடன்பாடுகளுக்குத் துரோகம் இழைக்கப்பட்டால், நேரக்கூடிய ஆபத்தை எடுத்துரைக்கும் ஆற்றல் இருக்க வேண்டும்.

விக்னேஸ்வரனையும் கஜேந்திரகுமாரையும் பகைவர்களாகப் பார்க்காமல், தமிழ் வன் சக்தியின் குறியீடாக நோக்கப்படும் அவர்களின்பால் தமிழ்த் தேசம் ஈர்க்கப்பட்டால், தாம் அங்கம் வகிக்கும் கூட்டரசாங்கத்துக்கு வரக்கூடிய நெருக்கடியைத் தேவையான எல்லாத் தரப்புக்களுக்கும் விளக்கி – தமது மென் வலுவால் ஏற்படுத்தியுள்ள நல்லுறவுகளையும் பயன்படுத்தி – சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனும் சாதுர்யமாகக் காரியங்களைச் சாதிக்க வேண்டும்.

எழுக தமிழ்!, தமிழ் மக்கள் பேரவை, விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்ற வகையறாக்களையெல்லாம் – பிரச்சினைகளாகவும், தொல்லைகளாகவும் கருத்திலெடுத்துச் செயலிழக்கச் செய்ய முயற்சிப்பதில் தலைமைத்துவப் பண்பு எதுவுமே இல்லை. தமக்கு வாக்களித்த மக்களுக்குள்ளிருந்தே தன்னியல்பாக எழுகின்ற இந்த எழுச்சிகளையெல்லாம் நேர்மையாக ஊக்குவித்து, அந்த மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட ஆணைகளை நிறைவேற்றுவதற்கான பலமாகவும் ஆதரவாகவும் மாற்றியெடுப்பதில்தான் தலைமைத்துவச் சிறப்பு இருக்கின்றது.

சம்பந்தன் ஐயாவின் கட்சிக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பித் தமிழ் தேசம் வழங்கிய ஆணை– என்னவிதத்திலாவது தனது இறைமையை மீட்டெடுக்கும் படியாகவே அல்லாமல், மீண்டுமொரு முறை தாம் ஏமாற்றப்பட்டதான செய்தியைக் கொண்டுவரும்படியாக அல்ல. அவ்வாறான ஒரு செய்தியோடுதான் நாளை அவர்கள் வருவார்களெனில் – இன்று அவர்கள் மௌனமாக இருப்பதற்கான காரணம் நக்குண்டு நாவிழந்ததே என்றுதான் நாளைய வரலாறு எழுதும்.

அவ்வாறாகவேதான் வரலாறு எழுதப்பட்டுவிடுமாயின் – தமிழ்த் தேசத்தின் இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்கான பிரதான மூலோபாயத்தின் ஒரு கூறாக மட்டுமே இருக்கவேண்டிய வன்போக்கு அணுகுமுறையே, பிரதான மூலோபாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விடக்கூடிய ஏது நிலைகள் உருவாகலாம். நல்லதே நடக்கவேண்டும் என விரும்புகின்ற எவராலுமே விரும்பப்படும் ஒரு கட்டவிழ்வாக அது இருக்காது.

• (முற்றும்)

# மனிதனைத் தேடும் மனிதன் 4

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*


*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*''இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*



உழைக்கும் மனிதனை மையப் புள்ளியாக வைத்தே கார்ள் மாக்ஸ் தனது சிந்தனைக் கோட்டையைக் கட்டி எழுப்புகிறார்.

உழைக்கும் மனிதன், அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி, அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம், அந்த உற்பத்தி உலகத்திலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள், அந்த உற்பத்தி உறவுகளில் இருந்து தோற்றம் கொள்ளும் வர்க்கப் பிரிவுகள், அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளிலிருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்த புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்தச் சமூக மாற்றங்களாக அசைந்து செல்லும் வரலாறு - இப்படியாக உழைக்கும் கரங்களிலிருந்து கட்டவிழ்கிறது மனித சரித்திரம்.

மனிதனே பொருளுலகத்தையும் படைக்கிறான். சமூகத்தையும் படைக்கிறான்; தன்னையும் படைக்கிறான். மாக்ஸிய தரிசனம் மனிதனை இந்த உலகத்தின் கடவுளாகச் சித்திரிக்கிறது.

இந்த மாமனிதன் தனி மனிதன் அல்லன், அவன் சமூக மனிதன். சமூக உறவுளால் உருவாக்கம் பெறும் மனிதன். சமூக உறவுகள் என்ற சிக்கலான சிலந்தி வலைக்குள் சிக்கப்பட்டிருக்கும் மனிதன்.

சமூகம் என்பது தனி மனிதர்களால் அமையப்பெற்ற ஒரு மக்கள் கூட்டம் அல்ல. அன்றி தனி மனிதர்களின் உறவு நிலையையும் அது குறித்து நிற்கவில்லை. சமூகம் என்பது ஒரு கட்டமைப்பாக இயங்குகிறது. பல்வேறு சமூகக் கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக, ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவையாக, ஒன்றோடு ஒன்று ஆதிக்கம் செலுத்துவனவாக, ஒரு முழுமையான கட்டமைப்பாக சமூகம் செயற்படுகிறது.

இந்தச் சிக்கலான சமூக உறவுகளுக்கு மத்தியில் தனிமனிதன் இருப்புக்கொள்கிறான். தனது இருப்பு நிலையைத் தனி மனிதன் நிர்ணயித்து விடுபவனல்லன். சமூக இயக்கமே தனிமனிதனின் தலைவிதியை நிர்ணயித்து விடுகிறது.

தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் ஒரு புறமும், உற்பத்தி உறவுகளின் நிர்ணய சக்திகள் மறுபுறமுமாக, இயற்கையினதும் சமூகத்தினதும் அழுத்தங்கள் தனி மனிதனின் வாழ் நிலையை நிச்சயித்து விடுகின்றன.

காள் மாக்ஸின் புகழ்பெற்ற அறிவியல் ஆய்வு நூலான 'மூலதனம்' முதலாளிய பொருள் உற்பத்தி உலகத்தை அறுவை செய்து பார்க்கிறது. முதலாளித்துவத்தின் முரண்பாட்டுக் கோலங்களையும், அதன் அசைவியக்க விதிகளையும் விளக்க முனைகின்றது.

'மூலதனத்தில்' திரை நீக்கம் செய்யப்படும் முதலாளிய சமூக அமைப்பில் தனித்துவமான, தனி இயல்புகளுடைய தனி மனிதர்களைக் கண்டுகொள்ள முடியாது. இங்கு தனி மனிதர்கள் பொருண்மிய கருத்துருவங்களின் மனித வடிவங்களாக (Personificaltions of economic categories) சித்திரிக்கப்படுகிறார்கள். உற்பத்தி உறவுகளின் சுமை தாங்கிகளாக உருவம் பெறுகிறார்கள். வர்க்க உறவுகளால் வனையப்பட்ட, வர்க்க நலங்களைப் பிரதிபலிக்கும் வர்க்க மனிதர்களாக இனங்காணப்படுகிறார்கள்.

முதலாளித்துவம் என்ற பொருள் உற்பத்தி நாடகத்தில், முதலாளி என்றும், தொழிலாளி என்றும் விற்பவன் என்றும், வாங்குபவன் என்றும் எண்ணில்லாப் பாத்திரங்களைத் தாங்கி மனிதர்கள் மேடை ஏறுகிறார்கள். அந்தந்தப் பாத்திரங்களை அவனவன் தேர்ந்து கொள்வதில்லை. அந்தப் பாத்திரங்களில் அவனவன் அமர்த்தப்படுகிறான். முதலாளித்துவம் ஓர் இராட்சத இயந்திரமாக, மனிதனுக்குப் புறம்பான ஓர் அரச சக்தியாக, மனிதனை அடிமை கொள்கிறது. தனி மனிதத்தைச் சிதைத்து விடுகிறது. மனித முகத்தை அழித்து விடுகிறது.

உழைக்கும் மனிதன், முதலாளியச் சந்தையில் ஒரு விலைப் பொருள் ஆகிறான். தனது வயிற்றை நிரப்பத் தனது உழைப்பை விற்கிறான்; தன்னை விற்கிறான். முதலாளிய ஆதிக்க சக்தி, தொழிலாளியின் ஆக்க சக்தியை விழுங்கிக் கொள்கிறது. அவனது உழைப்பு சக்தியைப்பிழிந்து எடுக்கிறது. தொழிலாளியின் உதிரத்திலிருந்து முதலாளி உபரி இலாபத்தை எடுத்துக்கொள்கிறான்.

உழைக்கும் மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்பு சக்தி பொருள் வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள் மயம் ஆகிறது. உழைப்பில் மனிதன் பொருளாக மாறும் விந்தை ஒன்று நிகழ்கின்றது. அந்தப் பொருள்களிலி ருந்து பண்ட உலகம் தோன்றுகிறது. உழைப்பு சக்தியால் உருவாக்கம் பெறும் இந் தப் பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக ஒரு புதிரான பொருள் உலகமாகத் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த முதலாளியப் பொருள் உலகில் உழைக்கும் மனிதன் தனது ஆக்கத்தின் அடையாளத்தை இனங்காண முடியாது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கு அந்நியமாகி, அவனிடம் இருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, இலாபமாகி, இன்னொருவரின் செல்வமாகி கூடுவிட்டுக் கூடு பாய்கிறது. முதலாளிய பொருள் உலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்து விடுகிறான். தனது மனிதத்தை இழந்து விடுகிறான்.

முதலாளியப் பொருள் உற்பத்தி முறைமையில் மனிதச்சிதைவு (Dehumanisation) நிகழும் சூத்திரத்தைக் கார்ள் மாக்ஸின் 'மூலதனம்' பிட்டுக் காட்டுகிறது.

மாக்ஸிய தரிசனத்தில் சமூகத்துக்கு வெளியாக, சமூக இயக்கத்துக்குப் புறம்பாக மனிதனைக் கண்டுகொள்ள முடியாது. மனித வாழ்வு சமூக வாழ்வாக, சமூக உறவுகளால் பின்னப்பட்ட வாழ்வாக, சமூக முரண்பாடுகளால் சிக்குப்பட்ட வாழ்வாக சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாக, சமூக இயக்கத்துக்கு உட்பட்ட வாழ்வாக இயங்குகின்றது. தனி மனிதன், தனித்த ஒருவனாக, சமூகத்துக்கு வெளியாக நின்று, தனது வாழ்நிலையை நிர்ணயிக்க முடியாது. சமூகத்தை மாற்றி அமைக்காமல் தன்னை மாற்றி அமைக்க முடியாது. சமூகத்துக்கு உள்ளே நின்று, சமூகப் பிறவியாக நின்று சமூக உறவுகள் ஊடாகவே மனிதன் தன்னை உருவாக்கிக் கொள்ள முடியும். காலங்காலமாக மனிதன் படைத்த சமூக உலகங்கள் மனித விடுதலைக்கு வழிகோலவில்லை. மனித முரண்பாடுகளைக் களைந்து விடவில்லை. பொருண்மிய சமத்து வத்தை உருவாக்கவில்லை. வரலாற்று பிரக்ஞையின்றி, வரலாறு அசைவியக்கம் பற்றிய விழிப்புணர்வு இன்றி, மனிதன் வரலாற்றைப் படைத்திருக்கிறான். வரலாற்றைப் படைக்கும் சக்தியாகிய உழைக்கும் மனிதன், ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, அடிமைப்படும்மனிதன் முதலாளித்துவத்தின் இரும்புப் பாதங்களால் மனித சருகுகளாக மிதிபடும் பாட்டாளி வர்க்க மனிதன் சுயவிழிப்புணர்வோடு, வரலாற்று பிரக்ஞையோடு, வரலாற்றைப் படைக்க வேண்டும். அந்த வரலாற்றுப் படைப்பாக உருவாக்கம் பெறும் புதிய சமூகத்தில், பொருளிய பொதுமை நிலவும். அந்த சமத்துவ சமூகத்தில் யுகம் யுகமாக மனிதர்கள் மத்தியில் நிலவி வந்த முரண்பாடுகள் நீங்கிய சூழலில் 'சோசலிச மனிதன்' பிறப்பு எடுப்பான். ஒரு புதிய யுகத்தின் புதிய மனிதனாக சோசலிச மனிதன் திகழ்வான். அகத்திலும் புறத்திலும் விடுதலை பெற்றவனாக, தனது ஆக்க சக்திக்கு ஆக்கபூர்வ வெளிப்பாடு காண்பவனாக, முழுமனிதனாக அவன் உருவாக்கம் பெறுவான். இந்த 'சோசலிச மனிதனின்' பிறப்புடன், வர்க்க முரண்பாட்டில் சுழலும் வரலாற்றுச் சக்கரம் தனது அசைவியக்கத்தை நிறுத்திக் கொள்ளும்.

முதலாளித்துவத்தின் கொடுமையை வெறுத்து, முழுமனித விடுதலையை விரும்பிய கார்ள்மாக்ஸ், இப்படியாக ஒரு தீர்க்கதரிசனம் சொன்னார்.

சோசலிச மனிதன் பிறப்பு எடுத்தானா? பொதுமையின் சமத்துவம் புதுமனிதனை, முழுமனிதனை தோற்றுவித்ததா? என்ற கேள்வி பற்றி பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம். இங்கு இது ஆய்வுப் பொருள் அல்ல.

காள்மாக்ஸ் கனவு கண்ட மனிதன் வேறு, கண்டுகொண்ட மனிதன் வேறு. அவர் கண்டுகொண்ட மனிதனைப் பற்றியே நாம் இங்கு கவனம் செலுத்துகிறோம்.

'மனிதன் யார்?' என்ற கேள்விக்கு மாக்ஸியத்தில் விடைகாண முடியாது என்பது சில நவமாக்ஸிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்ஸியமானது சமூக உறவுகள் பற்றியும் சமூக அசைவியக்கம் பற்றியும் ஆழமாகப் பார்க்கிறதே தவிர, மனிதம் பற்றியோ, மனிதன் பற்றியோ தேடுதலை நடத்தவில்லை என்பது இவர்களது வாதம். இந்தக் கருத்தை முன்வைப்பவர்களில் அல் தூசர் முக்கியமானவர்.

(தொடரும்)

# அமைதியை சீர்குலைக்கும் மிக மோசமான செயற்பாடு

## *பள்ளிவாசல் தாக்குதல் குறித்து முதலமைச்சர் கண்டனம்*



அம்பாறை, நவ.09

குருநாகல் நிக்கவவெரட்டிய ஜும்ஆ பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அமைதியை சீர்குலைக்கும் மிக மோசமான செயற்பாடு என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்த அறிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு;

'நாட்டில் இன்று நல்லாட்சி நிலவுகின்றது. இதனைத் தடுக்க பலர்பலவிதமான கொடூரச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் சிறுபான்மை மக்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் கண்டிக்கத்தக்க விடயங்களாகும்.

எனவே விஷமத்தனமான செயல்களைப்பொறுக்க முடியாத சிறுபான்மை மக்களே கடந்த அரசை வீட்டுக்கு அனுப்பி வைத்தமை இந்த இடத்தில் நினைவூட்ட வேண்டிய ஒன்றாகும்.

எனவே, இவ்வாறான கொடுமைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பள்ளிவாசல்கள், கோயில்கள் தாக்கப்படுதல் சிறுபான்மை மக்களின் காணிகள் சூறையாடப்படுதல், விஷமத்தனமான ஆர்ப்பாட்டங்களால் முஸ்லிம், தமிழ் மக்களைச் சீண்டுதல் ஆகியவற்றை முற்றாகத் தடுக்கும் நடவடிக்கையை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இதனைத் தடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தவறுமாக இருந்தால் அரசில் தொடர்ந்து இருப்பது கேள்விக்குறியாகும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், நாட்டில் வாழும் அனைத்து மக்களும் நிம்மதியாக வாழவேண்டும். அவர்களுக்கு அமைதி வேண்டும் என்ற நிலையை, அரசு மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து மக்களுக்கு உறுதியளிக்க வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ)

# 'அடம்ஸ்பீக்' எழுத்துக்களை அழித்த இளைஞர்கள்!



கொழும்பு, நவ.09

சிவனொளிபாத மலையை ஆங்கிலத்தில் அழைக்க பயன்படுத்தப்படும் ஆதாம் இடம் என்று பொருள்படும் எழுத்துக்களை அழித்ததாகக் கூறப்படும் இளைஞர்கள் இருவரின் புகைப் படங்கள் இணையத்தில் பரவி வருகின்றன.

சிவனொளிபாத மலை அடிவாரத்தில், மலைக்குச் செல்வதற்கு வழிகாட்டும் வகையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் சிவனொளிபாதமலை, (ஸ்ரீபாதய) மற்றும் 'அடம்ஸ்பீக்' என்று எழுதப்பட்டிருந்தது. இதில் அடம்ஸ்பீக் என்ற ஆங்கிலப் பெயரையே குறித்த இளைஞர்கள் அழித்துள்ளனர்.

பெயரை அழித்துவிட்டு, அதனை அழிக்கப் பயன்படுத்திய நிறப்பூச்சுப் போத்தலுடன் புகைப்படத்துக்கு காட்சி கொடுக்கும் படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன. (ஏ)

## தினசரி ராசி பலன் 09.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 9.15 – 10.15 |
| | மாலை : 4.45 – 5.45 |
| ராகு காலம் | : 12.00 – 1.30 |
| குளிகன் | : 10.30 – 12.00 |
| எமகண்டம் | : 7.30 – 9.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

அமிர்தயோகம் – சுபமுகூர்த்த நாள் – மேல்நோக்கு நாள்

**மேஷம்** : களிப்பு - குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு களிப்படையும் நன்னாள்.

**ரிஷபம்** : தடங்கல் - உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு காரியத்தில் தடங்கல் ஏற்படும்.

**மிதுனம்** : நலம் - இன்று மன மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காணும் நன்னாள்.

**கடகம்** : புகழ் - இன்று சந்திராஷ்டமம் என்பதால் எடுக்கும் அனைத்து காரியத்திலும் நிதானம் இருந்தால் புகழ் சேரும் நன்னாள்.

**சிம்மம்** : ஓய்வு - இன்று சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சலை குறைத்து ஓய்வு எடுக்கும் நன்னாள்.

**கன்னி** : உறுதி - இன்று எடுக்கும் செயல்களில் தெளிவுடன் செயல்படும் நன்னாள்

**துலாம்**: எதிர்ப்பு - எடுக்கும் காரியங்களில் மறைமுக எதிர்ப்பு வரலாம்.

**விருச்சிகம்**: பயம் - எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடையும்.

**தனுசு**: ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும், எடுக்கும் காரியத்தில் கீர்த்தி தரும் சிறப்பான நன்னாள்.

**மகரம்**: துன்பம் - சிறப்புக்கள் குறைந்து பொறுப்புக்கள் கூடும் நன்னாள்.

**கும்பம்**: ஈகை - மற்றவர்களின் மீது இரக்கம் காட்டும் நன்னாள்.

**மீனம்**: நன்மை - நெடுநாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்னாள்.

# நிறைவடைந்தது 'மித்ரா சக்தி' ராணுவப் பயிற்சி

இந்தியா–இலங்கை இராணுவத்தினர் ஒன்றிணைந்து நடத்திய 'மித்ரா சக்தி' 2016 பயிற்சி கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்துள்ளது.

அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் 'இந்தப் பயிற்சிகள் நிறைவுபெற்றன.

இலங்கையின் ராஜ்புட்டன ரைபிள் படைப்பிரிவு, இந்திய இராணுவத்தினர் மற்றும் சிங்ஹா படைப்பிரிவினர் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர்.

இந்தப் பயிற்சிகள் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகின. இதன் போது இரண்டு நாடுகளுக்கு இடையிலும் இராணுவ ஒத்துழைப்புக்கள், ஒத்துழைப்பை வலுப்படுத்திக்கொள்ளல், போன்ற பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. நான்காவது முறை யாக இந்தப் பயிற்சிகள் இடம் பெற்றுள்ளன. (ஏ)

# ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதே நோக்கம்

## *பதுளையில் பொலிஸ்மா அதிபர்*



பதுளை, நவ.09

'சுதந்திரமாகவும், அமைதியாகவும் தமது வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டும் என்பதே சாதாரண பிரஜையின் எதிர்பார்ப்பாக உள்ளது. அவர்களுக்கு ஆரோக்கிய சூழலை ஏற்படுத்துவதே, எமது நோக்கமாகும்' என்று தெரிவித்தார் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர.

பதுளை, ரிதிமாலியத்தையில் புதிய பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

"நாட்டில் ஆரோக்கியமானதும்பாதுகாப்பானதுமான சூழலை ஏற்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். அதற்கென, நாட்டில் அறுநூறு பொலிஸ் நிலையங்கள் வரை அதிகரிப்பதற்கு, கொள்கை ரீதியில் திட்டமிட்டுள்ளோம்.

தற்போது, நாட்டில், இனவாதமோ, பயங்கரவாதமோ இல்லை. அதுபோன்றதோர் அவலம் இனிமேல் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும்.

பிரஜைகள் ஒன்றிணைந்து இருக்கும் வரை, பொலிஸார் பலம் பொருந்தியவர்களாக இருப்பர். அதுபோன்று, பொலிஸார் பிரஜைகளுடன் ஒன்றிணைந்து இருக்கும் வரை அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். நாட்டின் பிரஜைகளுக்கு பொலிஸார் நண்பர்களேயன்றி எதிரிகளல்லர்"– என்றார்.(ஏ)



*யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேர் இலங்கை பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணியினரால் தமிழ்நாட்டில் அடையாறுப் பகுதியில் ஐ.நா.சபையின் 'யுனிசெப்' அலுவலகம் முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்ட போது...*

# இலங்கையில் படிப்படியாக அழிந்து வரும் ஜனநாயகத்தை உடன் காப்பாற்றுங்கள்!

## பிரித்தானிய அமைச்சருக்கு சங்கரி கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.09

"இலங்கையில் படிப்படியாக அழிந்து வரும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்" என்றதலைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி பொது நலவாய மற்றும் ஐ.நா.சபை ஆகியவற்றின் பிரித்தானிய இராஜாங்க அமைச்சரான பரோனீஸ் அன்லி அம்மையாருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமைச்சர் அன்லி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்தார். அவருக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் படிப்படியாக அழிந்துவரும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்.

இலங்கையின் தமிழ் மக்கள் சார்பிலும் தமிழர்விடுதலைக் கூட்டணிசார்பிலும் தங்களை வரவேற்று, இவ்விஜயத்தின் போது தாங்கள் மேற்கொண்டுள்ள பணிகள் பற்றி மகிழ்ச்சியடைவதுடன் அவை வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துகிறேன். குறிப்பாக, அவற்றில் இரண்டில் மிக அக்கறை கொண்டுள்ளேன். ஒன்று இலங்கையில் ஜனநாயகத்தின் நிலைப்பாடும், இரண்டாவது மனித உரிமைகள் சம்பந்தமானதுமாகும்.

நான் அக்கறை கொண்டுள்ள விடயங்களை பற்றி விளக்குவதற்கு முன்பு என்னைப்பற்றி ஒரு சிறிய அறிமுகம் தரவிரும்புகின்றேன். நான் ஒரு வழக்கறிஞனும் 60 ஆண்டுகளுக்கு மேல் அரசியலில் ஈடுபாடு கொண்டவனும் ஆவேன். 17 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டமையோடு – சகிப்புத்தன்மையையும் அகிம்சையையும் – முன்னெடுக்க யுனெஸ்கோ ஸ்தாபனத்தால் 2006 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மதன்ஜீத் சிங் விருது எனக்குக் கிடைத்தது.

இலங்கையில் அமுல்படுத்தப்படும் ஜனநாயகம் கேள்விக் குறியாகியுள்ளது என்பதைப் பற்றி தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகவே இக் கடிதத்தை எழுதுகிறேன். எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப் பின் தலைவருமான இரா.சம்பந்தன் தங்களைச் சந்திக்கவுள்ளார் என்பதை ஊடகங்கள் மூலமாக அறிந்தேன். 2004ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் – விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றும் தமிழ் மக்களின் தேசிய தலைமை – என்றும் பிரகடனப்படுத்தியதோடு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

அத் தேர்தலில் போட்டியிட்ட சகலமாற்றுக்கட்சி வேட்பாளர்களையும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தடுத்திருந்தனர். சில வேட்பாளர்கள் தாம் தமக்கு வாக்களிப்பதையே அனுமதிக்கவில்லை. நூற் றுக்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிள் கிராமம் கிராமமாகச் சென்று வாக்காளர்களை அச்சுறுத்தியும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்குமாறும் வற்புறுத்தி இருந்தன.

அதன் பயனாக இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட 22 ஆசனங்களை வெற்றியீட்டினர். எமது கணிப்பின்படி இத் தேர்தலில் தேர்தல் அதிகாரிகள் தமது கடமைகளை செய்யவிடாது தடுக்கப்பட்டு மோசடி மூலம் நடைபெற்ற தேர்தலாகும். 2004ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சிதமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற முத்திரையை தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்துவருகிறது. இவர்கள் இத் தேர்தலில் எவ்வாறு வெற்றியீட்டினார்கள் என்பதை முழு உலகமும் அறிந்ததே. ஆனால் துரதிஷ்டவசமாக அரசுக்கு மட்டும் தெரிந்த காரணத்துக்காக ஆர். சம்பந்தன் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக தெரிந்தெடுக்க பட்டாரேயொழிய தேர்ந்தெடுக்கப்படவில்லை.

கனேடிய ஒட்டாவா சமஷ்டி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பின் பொருத்தமான பகுதியை தங்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக கீழே தந்துள்ளேன்



– தமிழத் தேசியக் கூட்டமைப்பு எல்லாத் தமிழர்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். ஏனெனில் அது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதால்தான் நான் கவ னத்தில் எடுப்பது சம்பந்தன் அவர் கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டுவிலகிச் சென்றது தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியை யும் வழி நடத்துவ தற்கே. ஏனெனில் தமிழர் விடுதலைக் கூட்டணி விடுதலைப் புலிகளுக்கு தீவிரமாக ஆதரவு வழங்கத் தயக்கம் காட்டியமையாலேயே – இவ் விடயத்தில் உண்மையைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் – என்றுள்ளது.

(இ)

# சமூகத்துக்கு வேண்டிய பண்புகளுடன் இளையோரை வழிநடத்தும் சாரணியம்

## அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு



மன்னார், நவ.09

இளைஞர்களே நாட்டின் முதுகெலும்புகள். இவர்கள் சாரணியத்தின் ஊடாக வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். சமூகத்துக்கு வேண்டிய நற்பண்புகளை சாரணியம் கற்றுக் கொடுக்கிறது.

இவ்வாறு கூறினார் அமைச்சர் பா.டெனிஸ்வரன்.

தேசிய ரீதியிலான 32 ஆவது திரிசாரணர் ஒன்றுகூடல் இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது.

ஒன்று கூடல் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மூன்று நாள்கள் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள டிலாசால் சிறுவர் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த திரிசாரணர்கள் பங்குபற்றினர்.

ஒன்றுகூடலின் இறுதிநாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் வடக்கு அமைச்சர் பா.டெனிஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக டிலாசால் சிறுவர் வளாக இயக்குநர் அருட்சகோதரர் நெல்சன், இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர், ஆசிய பசுபிக் பிராந்திய இலங்கைப் பிரதிநிதி, தலைமைச் செயலக ஆணையாளர்கள், மாவட்ட ஆணையாளர்கள், மன்னார் மாவட்ட ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த நிகழ்வில் திரிசாரணர்களுக்கு உயரிய விருதான பேர்டன் பவல் விருது பெற்றவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவமும் சான்றிதழ்கள் வழங்கலும் இடம்பெற்றன.

அங்கு சாரணர்கள் மத்தியில் உரையாற்றினார். அமைச்சர் பா.டெனிஸ்வரன் அங்கு மேலும் தெரிவிக்கையில் :-

32 ஆவது தேசிய திரிசாரணர் ஒன்றுகூடல் முதன்முறையாக வடமாகாணத்தில் அதுவும் மன்னார் மாவட்டத்தில் நடைபெறுகிறது.

சாரணியத்தின் ஸ்தாபகராகிய தந்தை பேர்டன் பவல் அவர்களின் இளைஞர்களுக்கான வழிகாட்டல் மிகவும் பாராட்டத்தக்கது. சமூகத்துக்கு மிகவும் இன்றியமையாதது.

இளைஞர்களே நாட்டின் முதுகெலும்பு. சாரணியத்தின் வழிகாட்டலில் இளைஞர்கள் சமூகத்துக்கு தேவையான பண்புகளுடன் வளர்கின்றனர்.

குறிப்பாக கடவுளுக்கும் நாட்டுக்கும் சேவை செய்வதை தாரக மந்திரமாக கொண்ட சாரணியம் இளைஞர்களின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாறு வளர்க்கப்படும் இளைஞர்களே சமூக, பொருளாதார வளர்ச்சியில் முக்கியபங்கு ஆற்றுகின்றனர்.

இனங்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு மற்றும் மனிதநேயம் இதன் மூலம் கட்டியெழுப்பப்படுகிறது.

இப் பண்புகளோடு திரிசாரணர்கள் சமூகத்தை கட்டியெழுப்ப எப்பொழுதும் உதவி செய்ய வேண்டும். – என்றார்.

(ஐ-81)

# ஜனாதிபதி செயலகத்தில் ஆளும் கட்சியின் கூட்டம்

ஆளும் கட்சியின் கூட்டம் அலரி மாளிகையில் இருந்து, ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஆளும் கட்சியின் கூட்டங்கள் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் அலரி மாளிகையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டங்களின் போது சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. ஜனாதிபதி செயலகத்தில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சி கூட்டமொன்றின் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்து காரணமாக, ஜனாதிபதி பங்கேற்கும் ஆளும் கட்சி கூட்டங்களில் மட்டும் பங்கேற்பது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆவா குழுவினர் கைது தொடர்பாக உறவுகள் ஜெனிவாவில் முறைப்பாடு

கொழும்பு,நவ.09

ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டமை குறித்து ஜெனீவாவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் இயங்கி வரும் ஆவா என்ற பாதாள உலகக் குழுவுடன் தொடர்பு பேணிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் சிலரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களின் உறவினர்கள் ஜெனிவாவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மனித உரிமை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளாலி பிரதேசத்தைச் சேர்ந்த அலெக்ஸ் அரவிந்தன், கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த கபில்நாத் சிவலிங்கம் மற்றும் பிரதாபன் கனகரட்ணம் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை காப்பாற்றும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஊடாக உறவினர்கள் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ)

# 7 இந்தியத் தூதரகங்களின் இணையங்களில் ஊடுருவல்

## அவற்றிலிருந்து தகவல்கள் திருடப்பட்டு பகிரங்கம்



டில்லி, நவ.09

ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் உள்ள, 7 இந்தியத் தூதரகங்களின் இணையத்தளங்களில் ஊடுருவிய இருவர், அதில் இருந்த தகவல்களை வெளியிட்டு உள்ளனர்.

'ஹேக்கர்கள்' எனப்படும் இணையத் தளங்களில் ஊடுருவி, அதன் தகவல்களைத் திருடுபவர்கள், இந்தியத் தூதரகங்களின் இணையத்தளத்தில் ஊடுருவி தகவல்களைத் திருடியுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது. இவ்வாறு திருடிய அந்தத் தகவல்களை, வேறொரு இணையத் தளத்தில் பதிவிட்டுள்ளதாக, 'டுவிட்டர்' சமூகத் தளத்தில், அந்த ஹேக்கர்கள் கூறியுள்ளனர்.

கபுட்ஸ்கி, காசிமீர்ஸ் என்ற பெயருள்ள அந்த ஹேக்கர்கள், இது குறித்து, டுவிட்டரில் பதிவிட்டுள்ள செய்தியில் கூறியுள்ளதாவது:-

தென்னாபிரிக்கா, லிபியா, மாலாவி, மாலி, இத்தாலி, சுவிற்சர்லாந்து, ருமேனியா ஆகிய நாடுகளில் உள்ள, இந்தியத் தூதரகங்களின் இணையத்தளத்தை ஹேக்கிங் செய்து, அந்தத் தகவலை வேறோர் இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளோம்.

இந்தியத் தூதரகங்களின் இணையத் தளங்கள் பாதுகாப்பானவையாக இல்லை என்பதை நிரூபிக்கவே இவ்வாறு செய்துள்ளோம். நாங்கள் திருடியுள்ள தகவல்களில் ஒரு சிலவற்றை மட்டுமே தற்போது வெளியிட்டுள்ளோம். இதேபோன்ற நிலையில்தான், பெரும்பாலான இந்தியத் தூதரகங்களின் இணையத் தளங்கள் உள்ளன" இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

நெதர்லாந்தைச் சேர்ந்த இவர்கள், இந்திய தூதரகங்களின் பணியாற்றும் அதிகாரிகளின் கடவுச்சீட்டு எண்கள், ஈ-மெயில் விவரங்கள், இரகசியக் குறியீடு உட்பட, பல்வேறு தகவல்களைத் திருடியுள்ளனர்.

அந்தந்த நாடுகளில் உள்ள இந்தியர்களின் விவரங்களையும் திருடியுள்ளமை தெரிய வந்துள்ளது. ஆனால், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், இது குறித்து எந்தக் கருத்தையும் இது வரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

# உடல்நலக்குறைவு காரணமாக காலமானார் காந்தியின் பேரன்



அகமதாபாத், நவ.09

மகாத்மா காந்தியின் பேரன் கனு காந்தி (வயது87) உடல்நலக் குறைவால் குஜராத்தில் நேற்று முன்தினம் காலமானார்.

மாரடைப்பு மற்றும் மூளையில் இரத்தக் கசிவு காரணமாக சூரத் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

வயோதிபம் காரணமாக மருத்துவக் கண்காணிப்புகள் எவையும் பலனளிக்கவில்லை. இதனால், அவரது உடல் நலம் நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. மேலும், கனுகாந்தி சுய நினைவின்றி இருந்ததும் அவரது உடல் நிலையில் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் அவரது உயிர் பிரிந்தது.

மக்கள் அஞ்சலிக்காக கனு காந்தியின் உடல், குஜராத்தில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. 'நாசா' விண்வெளி ஆய்வு மையத்தின் விஞ்ஞானியாகப் பணியாற்றியவர் கனு காந்தி. விடுதலை வேள்வியின் மைல்கல்லாகக் கருதப்படும் 'தண்டி யாத்திரை' போராட்டத்தின் போது மகாத்மாவின் கைத்தடியைப் பிடித்து அழைத்துச் சென்ற பெருமையும் அவருக்கு உண்டு.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கனு காந்தியின் உடல் நிலை குறித்து விசாரித்த பிரதமர் மோடி, அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். மேலும், மோடியின் அறிவுறுத்தலின்படி, அண்மையில் மருத்துவமனைக்குச் சென்று கனு காந்தியிடம் நலம் விசாரித்த மத்திய அமைச்சர் மகேஷ் சர்மா, அவரது சிகிச்சைக்குத் தேவையான உதவிகளை செய்து கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# விஜய் மல்லையாவை நாடு கடத்தக் கோரிக்கை

டில்லி, நவ.09

வெளிநாட்டுக்குத் தப்பியோடிய தொழிலதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு நாடு கடத்தும்படி பிரிட்டனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரபல தொழிலதிபரான விஜய் மல்லையா மீது, 9 ஆயிரம் கோடி ரூபா கடன் பாக்கி வைத்துள்ளதாக, பல்வேறு வங்கிகள் வழக்குத் தொடர்ந்தன. அதைத் தொடர்ந்து, மல்லையா, பிரிட்டனின் லண்டன் நகருக்குத் தப்பிச்சென்றார். அவர் மீது, நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள பிரிட்டன் பிரதமர் தெரசா மே, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது தொழில் அதிபர் விஜய் மல்லையா, ஹெலி ஒப்பந்த ஊழலில் தொடர்புடைய கிறிஸ்டியன் மைக்கேல் உட்பட 60 பேரை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி பிரிட்டன் பிரதமர் தெரசா மேயிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. பிரிட்டன் தரப்பிலிருந்து 17 பேரைத் திரும்ப ஒப்படைக்க இந்தியாவிடம் கோரிக்கை விடப்பட்டது.

இந்தப் பேச்சில் தப்பியோடி தலைமறைவாக இருக்கும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக, அவர்களை நாடு கடத்தி சுமுகமாக தீர்வு காண்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. (ஏ)



இந்திய மத்திய அரசால் கொண்டுவரப்படவுள்ள பொது சிவில் சட்டத்தை கண்டித்து முஸ்லிம் ஜமா அத் சார்பில் மதுரை ஓபுளா படித்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

# கன்னடத் திரைப்படப் பிடிப்பில் விபரீதம்; பறக்கும் ஹெலியில் இருந்து பாய்ந்த இரு நடிகர்கள் நீரில் மூழ்கிப் பலி!


பெங்களூர் அருகே இடம் பெற்ற கன்னட திரைப்பட படப்பிடிப்பின் போது ஹெலியில் இருந்து ஏரியில் குதித்த 2 நடிகர்கள் நீரில் மூழ்கிப் பலியாகினர்.

கர்நாடக மாநிலம் ராம்நகர் மாவட்டம் மாகடி அருகே திப்பகொண்டனஹள்ளி ஏரி உள்ளது. பெங்களூரில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள இந்த ஏரியில் நேற்று முன்தினம் காலை கன்னட நடிகர் துனியா விஜய் நடிக்கும் 'மஸ்திகுடி' திரைப்படத்தின் படப் பிடிப்பு நடைபெற்றது. ஏரியைச் சுற்றியுள்ள பகுதியில் துனியா விஜய் நடித்த காட்சிகளை இயக்குநர் நாகசேகர் படமாக்கினார்.

அதைத் தொடர்ந்து துனியா விஜய், வில்லன் நடிகர்கள் அனில், உதய் ஆகியோருடன் சண்டைக் காட்சி படமாக்கப்பட்டது. அப்போது மூவரும் சுமார் 100 அடி உயரத்தில் பறக்கும் ஹெலியில் இருந்து ஏரியில் குதித்து நீச்சல் அடித்து கரை சேர்வது போன்ற காட்சிகளைப் படமாக்க நாகசேகர் முடிவு செய்தார்.

எனவே, பிற்பகல் 3 மணி அளவில் துனியா விஜய், அனில், உதய் ஆகிய மூவரும் ஹெலியில் இருந்து ஏரியில் குதித்தனர். அடுத்த சில நிமிடங்களில் துனியா விஜய் மட்டும் நீரில் நீந்தி கரையை அடைந்தார். ஆனால் நீண்ட நேரமாகியும் அனில், உதய் ஆகிய இருவரும் கரைக்கு வரவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த படக்குழுவினர் மற்றும் சண்டை கலைஞர்கள் உடனடியாக நீரில் குதித்து இருவரையும் தேடினர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த மீட்புப் படையினர் 3 படகுகள் மூலம் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ராம்நகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்திர குப்தா சம்பவ இடத்துக்குச் சென்று, மஸ்திகுடி திரைப்படக் குழுவினரிடம் விசாரணை நடத்தினார். அதையடுத்து மஸ்திகுடி திரைப்படத் தயாரிப்பாளர் உள்ளிட்ட படக்குழுவினர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். (ஏ)



# தமிழக மீனவர் சங்கங்கள் அதிருப்தி

சென்னை, நவ.09

இலங்கை, இந்திய அமைச்சர்கள் இடையிலான மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சு தொடர்பில் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 5 ஆம் திகதி டெல்லியில் இந்த பேச்சு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை-இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் பேசப்பட்டதுடன், இரண்டு நாடுகளுக்கும் இடையில் இணைந்த செயற்குழுவையும், அவசர அழைப்பு சேவையையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், இதனால் தங்களின் பிரச்சினைகள் தீரப் போவதில்லை என்று, தமிழக கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் அறிவித்துள்ளன.

குறித்த பேச்சு தொடர்பில் அதிக எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், இறுதியில் அதிருப்தியே ஏற்பட்டதாக சங்கங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

## ஹொங்கொங்கில் குண்டுவெடிப்பு அமைதிப்படையினர் 32 பேர் காயம்!



கின்சா, நவ.09

ஹொங்கொங் நாட்டில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்பில் குழந்தை ஒன்று பலியானதுடன், 32 இந்திய அமைதிப்படை வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

ஹொங்கொங் நாட்டில் 1996- 2003 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்நாட்டுப் போர்களில் பல லட்சம் மக்கள் பலியாகினர். அதை அடுத்து அங்கு ஐ.நா. அமைதிப் படை அனுப்பப்பட்டது. தற்போது ஐ.நா. அமைதிப் படையின் 18 ஆயிரம் வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தற் பாதும் பல ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன. அவர்கள், ஐ.நா. அமைதிப்படையினரை குறி வைத்துத் தாக்குதல் நடத்து கின்றனர்.

இந்தநிலையில், கோமா நகரில் நேற்றுக் காலை ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் ஒட்டப் பயிற்சி மேற்கொண்ட போது அங்கு சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்தது. வீரர்களைக் குறி வைத்து நடத்தப்பட்ட இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் 32 இந்திய அமைதிப்படை வீரர்கள் காய மடைந்தனர் என்றும், ஒரு குழந்தை உயிரிழந்ததாகவும் ஐ.நா. அமைதிப்படை தெரிவித் துள்ளது.

வெடிச்சத்தம் மற்றும் அழுகைச் சத்தம் கேட்டு சம்பவ இடத் துக்கு விரைந்து சென்று பார்த்த போது, அமைதிப்படை வீரர்கள் மூவர் பலியாகினர் என்று அருகில் உள்ள மசூதியின் இமாம் தெரிவித்தார். (ஏ)

# தலை துண்டிக்கப்பட்ட நிலையில் 100 உடல்கள்

## மொசூலில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் கொடூரம்

மொசூல், நவ.09

ஈராக்கின் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள மொசூல் நகரில் தலை துண்டிக்கப்பட்ட 100 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள மொசூல் பகுதியை முற்றாகக் கைப்பற்ற ஈராக் ராணுவமும், குர்து படைகளும் தீவிரமாக உள்ளன. இதனால் இரு தரப்புக்கும் இடையே கடும் போர் நடைபெற்றுவருகின்றது.

அதைத்தொடர்ந்து மொசூலின் பெரும்பாலான பகுதிகள் ஈராக் ராணுவத்தின் வசம் வந்து விட்டன. எனினும் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், மொசூலில் இருந்து 15 கி.மீற்றர் தூரத்தில் உள்ள ஹம்மாம் அல்-அலில் நகரத்தின் விவசாய கல்லூரியின் வெளியே ஒரே இடத்தில் குவியலாக பிணம் புதைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

எனவே, ராணுவத்தினர் அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தனர். அப்போது அங்கு 100 பேரின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது. அவை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன.



மொசூல் மற்றும் அதைச் சுற்றியுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக ஐ.எஸ்.தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தற்போது அங்கு தாக்குதல் தீவிரப்படுத்தப்படும் நிலையில் அங்கிருந்து தப்பி ஓடிய பொதுமக்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொடூரமாகக் கொன்று புதைத்து இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையே, மொசூல் பகுதியில் பாஷிகா நகரம் மற்றும் 5 கிராமங்கள் உள்ளிட்ட பகுதிகளை ஈராக் மற்றும் குர்து கூட்டு ராணுவம் மீட்டுள்ளது. (ஏ)


## விமானத்தில் பாம்பு உடனடியாக தரையிறக்கம்

மெக்சிகோ, நவ.09

மெக்சிகோ நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய விமானம் ஒன்றில் 3 அடி நீளமான பாம்பு இருந்ததால் அந்த விமானம் மெக்சிகோ விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப் பட்டது.

மெக்சிக்கோவின் டொரோன் பகுதியிலிருந்து தலைநகர் மெக்சிக்கோ நகருக்கு ஏரோ மெக்சிக்கோவின் விமானம் சென்று கொண்டு இருந்தது. விமானம் மெக்சிக்கோ நகரை நெருங்கிய போது பாம்பு ஒன்று விமானத்தில் புகுந்ததால் பயணிகள் அலறியடித்து ஓடினர்.

விமானத்தில் பாம்பு புகுந்ததைத் தொடர்ந்து விமானத்தில் அங்குமிங்கும் ஓடிய பயணிகள் விமானத்தை உடனடியாகத் தரையிறக்கும்படி விமானியிடம் கேட்டுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து மெக்சிக்கோ விமான நிலையத்தில் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே அந்த விமானம் தரையிறக்கப்பட்டது. (ஏ)



வடகொரியாவில் முதன் முறையாக சூரிய சக்தியால் இயங்கக்கூடிய படகுப்போக்குவரத்து சேவையை ஆரம்பித்துள்ளது. இந்த படகுகள் முழுமையாக சூரிய சக்தியால் இயங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப்படகுகளை ரியாங்னாம் என்ற கப்பல் நிறுவனம் தயாரித்துள்ளது. ஒவ்வொரு படகும் 23 மீற்றர் நீளம் மற்றும் 6 புள்ளி 5 மீற்றர் அகலத்தைக் கொண்டுள்ளது. சுமார் 50- 60 பேர் வரை இந்தப் படகில் பயணம் செய்யமுடியும்.

## சோமாலியாவில் குழுக்கள் மோதல்; 29 பேர் பலி!

மொகாதிஸ், நவ.09

சோமாலியாவின் பண்ட் லேண்ட் மற்றும் கல்முடக் பகுதியில் இருதரப்பினரிடையே நடைபெற்ற மோதலில் 29 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சோமாலியாவில் கடந்த 25 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் நிலையில், சுயாட்சிபெற்ற பண்ட் லேண்ட் மற்றும் கல்முடக் மாகாண எல்லைப் பகுதியான கல்கயோவில் இருதரப்பினருக்கும் இடையே கலவரம் வெடித்தது.

இந்தக் கலவரத்தில் பண்ட் லேண்ட் பகுதியைச் சேர்ந்த 16 வீரர்கள் உயிரிழந்தனர் என்றும், 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தெற்கு கல்கயோ பகுதியைச் சேர்ந்த 13 பேரும் இக்கலவரத்தில் உயிரிழந்துள்ளனர். (ஏ)

## ஆஸியில் கொத்துக் கொத்தாக இரட்டைத் தலை சுறாக்கள்!



கான்பரா, நவ.09

ஆஸ்திரேலிய கடற்பகுதியில் தற்போது கொத்துக் கொத்தாக இரட்டைத் தலை சுறாக்கள் மீனவர்களின் வலைகளில் சிக்கி வருகின்றன. இவற்றின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தமை விஞ்ஞானிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பொதுவாக ஒவ்வொரு உயிரினத்திலும் விநோதமாக சில உயிர்கள் பிறக்கும். ஆனால் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும்.

இரட்டைத்தலை சுறாக்கள் வழக்கத்துக்கு மாறாக அதிகளவில் காணப்படுகின்றமை தான் விஞ்ஞானிகளின் குழப்பத்துக்குக் காரணம். இனத்துக்குள்ளேயே தொடர்ந்து உறவு கொள்ளுவதால் இப்படி விநோதமாக பிறக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தச் சுறாக்கள் ஒரே நேரத்தில் 50 குட்டிகளை போடுகின்றன என்றும் அதேநேரம் கருவில் இருக்கும் அனைத்துக் குட்டிகளும் இரட்டைத் தலையுடன் இருந்தால் மட்டுமே அதன் எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இருக்கும் என்றும் இது ஆச்சரியமான ஒன்று என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய கடற்பகுதியில் இரட்டைத் தலை சுறாக்கள் மீனவர்களின் வலையில் வந்து சிக்கியமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## பாக்.இந்தியத் தூதருக்கு அழைப்பாணை

இஸ்லாமாபாத், நவ.09

பாகிஸ்தானில் உள்ள இந்திய துணைத் தூதர் ஜே.பி. சிங்கிற்கு அந்நாட்டு வெளியுறவுத் அமைச்சகம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர். மாநிலத்தில் உள்ள எல்லைக் கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் அத்துமீறி தாக்குதலில் ஈடுபடுகின்றனர் என்று இந்திய ராணுவம் குற்றம் சாட்டி வருகிறது. அதே போல், தங்களது நாட்டுக்குள் இந்திய ராணுவம் நுழைந்து தாக்குதலில் ஈடுபடுகின்றனர் என்று பாகிஸ்தானும் குற்றம் சாட்டி வருகிறது.

இதனிடையே, டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய மெகமூத் அக்தர் உளவு வேலைகளில் ஈடுபட்டது அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது. இதைத் தொடர்ந்து அவர் இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்டார். இதற்குப் பதிலடியாக இந்திய தூதரக அதிகாரி ஒருவரை பாகிஸ்தான் வெளியேற்றியது. இருதரப்பிலும் இந்த பழிவாங்கும் நடவடிக்கை தொடர்ந்தது.

அதனையடுத்து இறுதியாக பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் 8 பேர் மீது அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் குற்றம் 'சாட்டியது. அதனால் 8 தூதரக அதிகாரிகளும் இந்தியா திரும்புகின்றனர்.

இதில் மூன்று அதிகாரிகள் டுபாய் செல்லும் எமிரேட் விமானம் மூலம் டில்லி வருகின்றனர். மீதமுள்ள 5 அதிகாரிகள் வாகா எல்லை வழியாக வீதி மார்க்கமாக வருகின்றனர்.

இந்த பரபரப்புக்கு இடையே, பாகிஸ்தானில் உள்ள இந்தியத் துணைத் தூதர் ஜே.பி.சிங்கிற்கு அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. எல்லைக்கோட்டு பகுதியில் தொடர்ந்து அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டு வருவது தொடர்பாக இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ஏ)

## டுபாய் விமான நிலையத்தில் தமிழில் அறிவிப்பு

ஷார்ஜா, நவ.09

டுபாய் விமான நிலையத்தில், முதன்முறையாக தமிழில் அறிவிப்பு வெளியிடும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தமிழர்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டுபாய்க்கு பணி நிமித்தமாக பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் சென்று வருகின்றனர். மேலும் பலர் அங்கு பல ஆண்டுகளாக பணியாற்றியும் வருகின்றனர். அவர்களைக் காண்பதற்காக அவர்களது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். இதனால் சென்னையில் இருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் டுபாய் நகருக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

இதை அடுத்து டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் முனையம் 3 இல் இருந்து எமிரேட்ஸ் விமானம் இயக்கப்பட்டு வருகிறது.

# இராணுவம் நடத்தும் சிகையலங்கரிப்பு நிலையங்களை மூட ஒரு மாத காலக்கெடு; தவறின் பதில் நடவடிக்கை

## படை முகாம்களுக்கு முன்னால் போராட்டம் நடக்கும் என எச்சரிக்கை



வவுனியா,நவ.09

வடமாகாணத்தில் எமது தொழிலைப் பாதிக்கும் வகையில் இராணுவத்தினரால் நடத்தப்படும் சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூடுவதற்கு ஒரு மாதகாலக் கெடு வழங்குவுள்ளோம். அதற்குள் மூடப்படாவிட்டால் வடமாகாணத்தின் அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் கால வரையறையின்றி மூடி இராணுவ முகாம்களுக்குமுன்னாள் போராட்டம் நடத்தப்படும் என வடமாகாண அழகக சங்கத் தலைவர் க.நாகராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, ரயில் நிலைய வீதியில் உள்ள முத்தையா மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வவுனியா மாவட்ட அழகக சங்க பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாகராசா மேலும் கூறியவை வருமாறு:-

வடமாகாணத்தில் எமது சிகை அலங்கரிப்புத் தொழிலாளர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் தமது தொழில்களைச் செய்து வருகிறார்கள். வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு தொழில்களை செய்வதால் எமது தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் தொழிலாளர்களின் நாளாந்த வாழ்வாதாரப் பிரச்சினை கூட விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

**எமது தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிப்பு**

இராணுவத்தினர் தாம் நிலை கொண்டுள்ள பகுதிகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களை அமைத்துள்ளதுடன் குறைந்த கட்டணத்தில் சிகை அலங்கரிப்பும் செய்து வருகிறார்கள். பொதுவான விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமை மற்றும் விசேட விடுமுறை தினங்களில் கூட அவர்கள் தமது நிலையங்களை திறந்துள்ளார்கள். இதனால் எமது வாடிக்கையாளர்கள் அங்கு செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இத்தொழிலை செய்துவரும் எமது தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியாவின் பம்பைமடு, ஓமந்தை நாம்பன்குளம், மன்னாரின் மாந்தை கிழக்கு, கிளிநொச்சியின் பூநகரி, கண்டாவளை, மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை அமைத்து பொதுமக்களுக்கும் தொழில் செய்து வருகின்றனர். யாழ் மாவட்டத்திலும் இவ்வாறு இராணுவத்தினரின் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் இருந்தும் அவர்கள் இவ்வாறு வேலை செய்வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. அவர்கள் இராணுவத்துக்கே வேலை செய்கின்றனர். ஆனால் ஏனைய மாவட்டங்களில் இத்தொழிலை அவர்கள் செய்து எமது வாழ்வாதாரத்தை அழிக்கிறார்கள்.

வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சிகை அலங்கரிப்பு சங்கங்கள் மூலம் இராணுவத்துக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியிருக்கின்றோம். பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டாம் என கோரியிருக்கின்றாம்.

**பரதேசிகளாகத் திரிய வேண்டி வரும்**

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பில் மாவட்ட மட்ட பிரதிநிதிகள் கூடி இறுதி முடிவெடுப்போம். இன்று வைத்தியர்கள், பஸ் சங்கத்தினர் போராட்டங்கள் நடத்தும் போது பொதுமக்கள் அனைவரும் பாதிப்பை எதிர் நோக்குகிறார்கள். வடக்கு, கிழக்கில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் நாம் கால வரையறையற்று மூடினால் அனைவரும் தாடி வளர்த்து பரதேசிகளாகத் தான் திரிய வேண்டி வரும்.

எனவே, அனைத்து சமூகங்களுக்கும் அறைகூவல் விடுகின்றோம். எமது வாழ்வாதார பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பொதுக் கூட்டத்தில் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர், வடக்கு மாகாணத்துக்குட்பட்ட அழகக சங்க உறுப்பினர்கள், வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்புத் தொழிலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-100)

## நலன்புரி சங்க பொதுக் கூட்டம்

மருதங்கேணி பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மருத்துவமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


மருத்துவமனைப் பொறுப்பதிகாரி டாக்டர். என்.ஜி. சுரேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மருத்துவமனை அபிவிருத்தியிலும், நோயாளர் நலன்புரி சங்கச் செயற்பாட்டிலும் ஆர்வமுள்ள இப்பகுதி சமூகஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 'காந்தீயம்' வெளிவந்துள்ளது

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான 'காந்தீயம்' சஞ்சிகையின் ஒக்ரோபர் - நவம்பர் மாதங்களுக்கான இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் 'பனை மரங்கள் நினைவூட்டும் மில்க் வைற் கனகராசா', 'காந்தியின் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடித்து வாழும் மாதகல் தந்த மாணிக்கம் காந்தி மாஸ்டர்', பரோபகாரி அண்ணா எஸ்.பி. நடராசா ஆகியோர் பற்றிய கட்டுரைகள் மற்றும் காந்தியடிகள் பற்றிய சிறப்புக் கவிதை உள்ளிட்ட பல விடயங்கள் வெளியாகியுள்ளன.

## சர்வோதய தலைவருக்கு பாராட்டு



மொறட்டுவ,நவ.09

சர்வோதய சிரமதான சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான கலாநிதி ஏ.டி.ஆரியரத்னவின் 85 ஆவது பிறந்த தின வைபவமும் பாராட்டு விழாவும் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு மொறட்டுவ சர்வோதய விஸ்வசமாதி மண்டபத்தில் நடைபெறும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர்ரணில்விக்கிரமசிங்க ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் மதப்பெரியார்கள் ஆசியும் வழங்குவர்.

கலாநிதி ஆரியரதனவின் 58 வருட சமூகப்பணி தொடர்பான பாராட்டுரையை பேராசிரியர் பிரதீ அபயசுந்தர நிகழ்த்துவார். கௌரவ தலைவருக்கு பிரமுகர்களும், ஊழியர்களும், மக்களும் கௌரவ சின்னங்களை வழங்குவார்கள்.

கடந்த யுத்த காலத்தில் வடக்குக்கு நேரடியாகச் சமூகமளித்து அரசுக்கும் இராணுவத்துக்கும் பொதுமக்களுக்கும் உறவுப் பாலமாக விளங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-19)

## கத்தி வைத்திருந்தவர் கட்டினார் ரூ.1000

தடை செய்யப்பட்ட கத்திக் கட்டளைச் சட்டத்தை மீறி தமது உடைமையில் அபாயம் விளைவிக்கக் கூடிய கத்தியை வைத்திருந்த ஒருவருக்கு 1000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன். காங்கேசன்துறை பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்திருந்தனர். (இ-9)

## சங்கீத பாடமுகாம் 15ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சங்கீத பாடமுகாம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் கோப்பாய் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலும், 16 ஆம் திகதி நல்லூர்க் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், 17 ஆம் திகதி யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சங்கீத பாடத்துக்கு தோற்றவுள்ள மாணவர்களையும் பாட ஆசிரியர்களையும் இப் பாட முகாமில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## முஸ்லிம் ஒன்றுகூடல் நிகழ்வு



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ்.முஸ்லிம் சிவில் சமூகமும் இணைந்து நடத்திய யாழ்.முஸ்லிம் ஒன்று கூடல் நிகழ்வு வடமாகாண சபை உறுப்பினர் ஜய்பூப் அஸ்மின் தலைமையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சோ.சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசவும், கௌரவ அதிதிகளாக வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, மாகாண சபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், இ. ஆர்னோல்ட் மற்றும் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆ.இரவீந்திரன், பணிப்பாளர் எஸ்.வனஜா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

விருந்தினர்கள் உரையில், முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திலுள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும், 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ், முஸ்லிம் சமூகம் எவ்வாறு ஒற்றுமையுடனும், இணக்கத்துடனும், விட்டுக்கொடுப்புடனும் வாழ்ந்தார்களோ அந் நிலை மீண்டும் ஏற்பட வேண்டுமென அனைத்து பிரதிநிதிகளும் வலியுறுத்திப் பேசினர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொடுத்த ஆசான்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற விழாவில் விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வு,உணவுக் கண்காட்சி, மரதன் ஓட்டம், கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவ்விழா சிறப்பாக அமைய உழைத்த பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கும், யாழ். முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் ஏனையோருக்கும் ஐ.அஸ்மின் நன்றிகளைத் தெரிவித்தார். (இ-19,7)

# போட்டித் தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் நெற்கொழு விளையாட்டுக்கழகம் அறிக்கை




நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடாத்தித்திய 'வடமாகாண வல்லவன் 2016' உதைபந்தாட்டத் தொடரின் முக்கிய போட்டியொன்றின் போது ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக போட்டி கைவிடப்பட்டு குழப்பத்தில் ஈடுபட்ட இரண்டு அணிகளுக்கும் போட்டித்தடை அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நெற்கொழு விளையாட்டுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,


குழப்பத்தில் ஈடுபட்ட அணிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டமை தொடர்பில் உதைபந்தாட்ட ரசிகர்கள் சிலர் தங்கள் ஆதங்கங்களைத் தெரிவித்து வருகின்றனர். இருந்தும் போட்டியை நடத்தும் கழகம் என்ற ரீதியிலும் சம்பவங்களை நேரில் அவதானித்தவர்கள் என்ற ரீதியிலும் பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் இனால் வழங்கப்பட்ட போட்டித்தடை சரியானதே என எமது கழகம் கருதுகின்றது.

இது இரண்டு அணிகளுக்கும் ஏமாற்றத்தை ஏற்படுத்தினாலும் சகல அணிகளையும் சமமாக கருதி இதுபோன்ற சம்பவம் இனியும் நடைபெறாமல் தவிர்க்கும் விதத்தில் செயற்படும்பொறுப்பு உதை பந்தாட்ட லீக்கிற்குரியது. இதனை முன்னுதாரணமாக கொண்டே ஏனைய அணியினரும் எதிர்காலத்தில் நடந்து கொள்வார்கள் என நம்புகின்றோம். இப்போட்டியின் போது பார்வையாளர் பகுதியில் நின்ற சிலர் எதிரணி வீரர்களை யும் ரசிகர்களையும் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் அவமதித்தனர். பார்வையாளர் ஒருவர் போட்டியின் போது மைதானத்திற்குள் அத்துமீறி நுழைந்தார், அதுவே பிரச்சினைகளுக்கு வித்திட்டது. அவர் போட்டியில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் வீரருக்கு இடையூறு ஏற்படுத்த முனைந்தது ஏற்றுக்கொள்ள முடியாதது.

போட்டியில் பங்குபற்றிக் கொண்டிருந்த வீரர் மைதானத்திற்குள் நுழைந்த பார்வையாளரைத் தாக்கியமை தவறானது. குறித்த நபரை மைதானத்தைவிட்டு அகற்ற போட்டிக் குழுவினர் முயற்சித்துக் கொண்டிருக்கும்போது வீரர் ஒருவர் பொறுமையிழந்து அவரைத் தாக்கியதே மேலும் பிரச்சினையை அதிகரிக்கச் செய்தது. போட்டியில் பங்குபற்றிய வீரர்களும் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டனர். குறிப்பாக அணி வீரர்கள் கழக உறுப்பினர்கள் ஏன் மூத்த உறுப்பினர்கள்கூட இதில் ஈடுபட்டனர். இரு அணி ரசிகர்களும் மைதானத்தில் நாட்டப்பட்டிருந்த கம்பங்களை பயன்படுத்தி தாக்குதலில் ஈடுபட்டனர். இது மேலும் கலகத்தை விளைவித்து மைதானத்தை போர்க்களம் போன்ற நிலைமைக்கு இட்டுச் சென்றது. அப்போது போட்டிக் குழுவினர் வீரர்களையும் நடுவர்களையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் சில வீரர்கள்மீது தாக்குதல் இடம்பெற்றமை துரதிஷ்டவசமானது.

வீரர்கள்களின் சீருடைகளும் எரியூட்டப்பட்டிருந்தன. குறைந்தளவு பொலிஸாரே மைதாத்தில் நின்றபோதும் அவர்கள் செயற்பாடும் அங்கு திருப்திகரமாக இருக்கவில்லை. பின்னர் அதிகளவு பொலிஸார் வரவழைக்கப்பட்டே நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று இரு அணிகளுக் குமான போட்டித்தடைக்குரிய காரணத்தை நெற்கொழு விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (க)

# கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகத்துக்குக் காணி கொள்வனவு



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்துகசு மேலதிக காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இக் காணி பல ஆண்டுகள் வாங்கும் முயற்சிகள் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், இரண்டு தடவைகள் காணிப் பதிவுக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டிஷருந்தன.

வெளிநாட்டு வாழ் கம்பர்மலை உறவுகளின் நிதி உதவியில் யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் முழுமையாக்கப்பட்டுள்ளது . நிர்வாகம் மற்றும் தலைவரின் முயட்சிகள் வரும் கால இளையோர்களின் விளையாட்டுக்களின் வளர்ச்சிக்குத் தடையின்றி அமைந்துள்ளது.

தற்போது மைதானத்தைச் சுற்றி வலைக்கம்பிகள் அமைப்பு முடிவுற்ற நிலையில் புதிய காணி சீரமைக்கப் படவுள்ளது. மிக விரைவில் விளையாட்டு அரங்கு அமைப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்து.

யங்கம்பன்ஸ் கழகத்துக்கு தேவையானவை நீர்த் தாங்கி, மைதானத்தை சுற்றி வலைக் கம்பிகள் என பல வேலை திட்டங்கள் முடிவுற்ற நிலையில் அடுத்த கட்டமாக விளையாட்டு அரங்கு,மின் விளக்கு என்பன மைதானத்துக்கு முக்கியமானதாகும்.

இந்த ஆண்டின் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர்களும் நடத்தப் படவுள்ளன. (க)

# சென்.மைக்கல் வெற்றிக்கிண்ணம்

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண ரீதியில் நடத்தப்படும் 'மாபெரும் துடுப்பாட்ட போட்டி 2016' எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது.

அணிக்கு 06 வீரர்களும் 5 பந்துப் பரிமாற்றமும் கொண்ட இந்தப் போட்டித் தொடர் 'சென் மைக்கல் வெற்றிக்கிண்ணம் 2016' இற்காக நடத்தவுள்ளது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள இந்தப் போட்டித் தொடரில் பங்கு பற்ற விரும்பும் கழகங்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். தொடர்புகள்: 0771725432, 0756031466 (க)

# விளையாட்டு வீரர்களுக்கு புத்துணர்வூட்ட வேண்டும்

## வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



மன்னார் துள்ளுக் குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்ட அணியினரை ஊக்குவித்து புத்துணர்வூட்ட வேண்டும் என்று வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிராமண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து, ஒரு தொகை நிதியை ஒதுக்கி கரப்பந்தாட்ட வீரர்களுக்காக பாதணிகளைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை துள்ளுக்குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகியிடம் இந்தப் பாதணிகள் அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன. (81)

# இங்கிலாந்துக்கு எதிரான இலங்கை மகளிர் அணி அறிவிப்பு




இங்கிலாந்து அணிக்கெதிராக விளையாடவுள்ள 14 பேரடங்கிய இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் விவரம் இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து மகளிர் அணி இலங்கை அணியுடன் 4 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடவுள்ளது.

இத் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டி இன்று எஸ்.எஸ்.ஸி. மைதானத்திலும் 2 ஆவது ஒருநாள் போட்டி 12 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திலும் 3 ஆவது ஒருநாள் போட்டி 15 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திலும் 4 ஆவது ஒருநாள் போட்டி 17 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திலும் இடம்பெற வுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ள மகளிர் குழாம் விமிரம் வருமாறு:-

இநோக்கா ரணவீர (அணித் தலைவி), பிராடினி வீரக்கொடி (உப தலைவி), டினாலி மனோதரா, நிலக்ஷ சில்வா, அமா காஞ்சனா, ஹசினி பெரேரா, சாமரி பொல்ஹம்பொல, சாமரி அத்தப்பத்து, நிபுனி ஹன்சிகா, சிறிபாலி வீரக்கொடி, சுகந்திகா குமாரி, ஒஷாதி ரணசிங்க, ஹன்சிமா கருணரத்ன, அச்சினி குலசூரிய ஆகியோர். (க)

# மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி



மன்னார் தாழ்வுபாடு சென். அன்ரெனீஸ் அணியை வீழ்த்தி கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டத்தின் இரண்டாவது போட்டியின்போதே தாழ்வுபாடு சென்அன்ரனீஸ் அணி யங்கம்பன்ஸ் அணியுடன் மோதியது.

பரபரப்பாக ஆரம்பித்த முதற் பாதி ஆட்டத்தில் எவ்வித கோல்களும் பெறப்படாத நிலையில் முதற் பாதியாட்டம் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் கோல் போட தடுமாறின இறுதி நேர முடிவின் 37 ஆவது நிமிடத்தில் ரதனின் சிறந்த பந்துப்பரிமாற்றத்தின் உதவியுடன் பார்த்தீபன் அணியின் வெற்றிக் கோலைப் போட்டார்.

இதனையடுத்து 01:00 என்ற ரீதியில் தாழ்வுபாடு சென் அன்ரனீஸ் அணியை வீழ்த்தி மூன்றாம் சுற்றுக்குள் யங்கம்பன்ஸ் அணி நுழைந்துள்ளது. (க)

# கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தை நிராகரித்தது ஏன்?

## மலிங்க விளக்கம்

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க கிரிக்கெட் சபையால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் சபையால் எனக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதனை நான் நிராகரித்துள்ளேன்.

காரணம் நான் கடந்த 11 மாத காலத்தில் இலங்கைக்காக ஒரு போட்டியில் கூட பங்குபற்றவில்லை. நான் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில்; அது ஏனைய ஒரு வீரருக்குச் செய்யும் அநீதியாகும்.

தற்போதைய நிலையில் நான் அணிக்காக விளையாடக்கூடிய தகுதியில் இல்லையென கருதுகின்றேன். அதனால்தான் குறித்த ஒப்பந்தத்தை நிராகரித்துள்ளேன். எதிர்காலத்தில் அணிக்காக விளையாடக் கூடிய தகுதி ஏற்படுமானால் அடுத்த ஒப்பந்தத்தில் என்னால் இணைந்துக் கொள்ள முடியும், அதற்கான தீர்மானத்தை கிரிக்கெட் சபையுடன் இணைந்து மேற்கொள்ள தயாராகவுள்ளேன்.

குறித்த விடயத்தை கிரிக்கெட் சபையிடம் தெளிவு படுத்தியுள்ளேன்.

எனது இந்த கோரிக்கையை கிரிக்கெட் சபை ஏற்றுக் கொள்ளுமென நான் நம்புகின்றேன். எனக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையில் எந்தவித தகராறுகளும் இல்லை.

எனக்கு ஒப்பந்தம் வழங்கியமைக்கு கிரிக்கெட் சபைக்கு எனது நன்றிகள்.

இதேவேளை, எனக்கு வழங்கிய ஒப்பந் தத்தை ஒரு இளம் வீரருக்கு கிரிக்கெட் சபை வழங்கும் பட்சத்தில் அது அணியை சக்தி மிக்கதாக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



# ரொனால்டோ ஓய்வு பெறுகிறார்?

உலகின் சிறந்த உதைபந்து வீரர்களில் ஒருவரான போர்த்துக்கலைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது ஓய்வு குறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.


தற்போது, ரியல் மாட்ரிட் கிளப் அணியில் நட்சத்திர வீரராக திகழ்ந்து வரும் 31 வயதான ரொனால்டோ.

மேலும், ஐந்து ஆண்டுகள் (2021) ரியல் மாட்ரிட் உடன் ஒப்பந்தம் செய்துள்ளார். இதற்காக ரொனால்டோவுக்கு 365,000 யூரோ அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தனது ஓய்வு குறித்து ரொனால்டோ கூறியவை வருமாறு:-

இது கண்டிப்பாக தனது கடைசி ஒப்பந்தமாக இருக்காது. நான் தொடர்ந்து விளையாட நிசைப்படுகிறேன். 41 வயது வரை நான் கண்டிப்பாக உதைபந்தாட்டத்தில் சாதனைகள் படைப்பேன் என உறுதியளித்துள்ளார்.

இதனால், ரொனால்டோ ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



# சிவப்பு அட்டை காட்டிய நடுவரை அடித்துக் கொன்ற விளையாட்டு வீரர்!

## மெக்சிக்கோவில் அதிர்ச்சிச் சம்பவம்

மெக்சிக்கோவில் இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சிவப்பு அட்டை காட்டியதால் நடுவர் கால் பந்துப் வீரர் ஒருவரால் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மெக்சிக்கோவின் ருலன் சின்கோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் உதைபந்தாட்ட போட்டி ஒன்று இடம் பெற்றுள்ளது. அப்போது அந்தப் போட்டிக்கு நடுவராக செயல்பட்ட விக்டர் ரெயோ என்பவர் ஒரு வீரருக்கு சிவப்பு அட்டை காட்டியுள்ளார். இதனால் கோபமடைந்த அந்த வீரர் தனது தலையால் விக்டர் முகத்தில் முட்டியுள்ளார்.

இதனால் நிலைகுலைந்து அப்படியே மைதானத்தில்



மயங்கி விழுந்த நடுவர் விக்டர் பரிதாபமாக உயிரி ழந்தார்.

இந்தச் சம்பவத்துக்கு காரணமான அந்த வீரர் தப்பியோடியுள்ளார். அவரை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். உதைபந்தாட்ட மைதானத்தில் நடுவர், வீரர் ஒருவரால் அடித்துக் கொலை செய்யப் பட்ட சம்பவம் அங்கு அதிர்ச் சியை ஏற்படுத்தி உள்ளது.

# டி.ஆர்.எஸ். முறை அறிமுகம்



இங்கிலாந்து தொடரில் நடுவரின் முடிவை மறு பரிசீலனை செய்யும் முறை (டி.ஆர்.எஸ்) அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக இங்கிலாந்து தொடரில் நடுவரின் முடிவை மறு பரிசீலனை செய்யும் முறை (டி.ஆர்.எஸ்) அறிமுகம் செய்யப்பட உள்ளது.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) இதை அறிமுகப்படுத்தியது. நடுவரின் முடிவை மறு பரிசீலனை செய்யும் முறைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. தற்போது ஒருவழியாக டி.ஆர்.எஸ். முறைக்கு ஒப்புக் கொண்டு இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

## இந்தியா - இங்கிலாந்து

# முதல் டெஸ்ட் நடப்பதில் சிக்கல்!

### உச்ச நீதிமன்றத்தில் பி.சி.சி.ஐ. மனுத் தாக்கல்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கும் (பி.சி.சி.ஐ.) மாநில கிரிக்கெட் சங்கங்களுக்கும் இடையிலான அனைத்துப் பணப் பரிமாற்றங்களையும் முற்றிலுமாக முடக்க உச்ச நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது. இதனால் இந்தியா - இங்கிலாந்து தொடரை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் பி.சி.சி.ஐ. மனு தாக்கல் செய்துள்ளது.


ஐ.பி.எல். போட்டிகளில் நடைபெற்ற மோசடிகளை அடுத்து இது தொடர்பாக விசாரணை நடத்தி பரிந்துரை அளிக்க லோதா குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது. எனினும், அந்தக் குழு அளித்த பரிந்துரைகளையும், சீர்திருத்தங்களையும் ஏற்க பி.சி.சி.ஐ. தயக்கம் காட்டியது. இந்நிலையில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.எஸ். தாக்குர் தலைமையிலான அமர்வு, பி.சி.சி.ஐ. மாநில கிரிக்கெட் சங்கங்கள் இடையிலான பணப் பரிமாற்றத்தை முற்றிலுமாக முடக்க உத்தரவிட்டது.


மேலும், பி.சி.சி.ஐ. யின் வரவு-செலவுக் கணக்குகளை முழுமையாக ஆய்வு செய்ய தனிப்பட்ட முறையில் கணக்காளர்களை நியமிக்குமாறு லோதா குழுவுக்கு உத்தரவிட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த எவ்வளவு நாள்கள் ஆகும் என்ற விவரத்தை உச்ச நீதிமன்றத்திலும், லோதா குழுவிடமும் வரும் டிசம்பர் 3 ஆம் திகதிக்குள் தெரிவிக்க வேண்டும் என்று பி.சி.சி.ஐ. தலைவர் அனுராக் தாக்குர், செயலாளர் அஜய் ஷிர்க்கே ஆகியோருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. லோதா குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த பி.சி.சி.ஐ. மறுத்து வருவதை அடுத்து இந்த நடவடிக்கையை உச்ச நீதிமன்றம் எடுத்தது.

இந்த நடவடிக்கையால் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கான பணப் பரிமாற்றத்தைக் கூட நடத்த முடியாது என்பதால் பி.சி.சி.ஐ. க்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கும் (பி.சி.சி.ஐ) மாநில கிரிக் கெட் சங்கங்களுக்கும் இடையிலான அனைத்து பணப் பரிமாற்றங்களையும் முற்றிலுமாக முடக்கியதால், இந்தியா – இங்கிலாந்து தொடரை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் பி.சி.சி.ஐ. மனு தாக்கல் செய்துள்ளது.

பணப்பரிமாற்றத்துக்கு அனுமதி வழங்காவிட்டால் இந்தியா – இங்கிலாந்து தொடரை நடத்துவதில் சிக்கல் ஏற்படும். ராஜ்கோட்டில் இன்று ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டி இரத்தாக வாய்ப்புள்ளது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து தலைமை நீதிபதியிடம் இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக நீதிபதி அனில் ஆர். தேவ் தெரிவித்துள்ளார். (க)





கொழும்புக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா தமது பதவிக்காலத்தை முடித்து நாடு திரும்புகின்றமையையொட்டி அவருக்கு பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்றது. அச்சமயம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் அவரது துணைவியார்,ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. ஆகியோர் இந்தியத் தூதுவருடன் உரையாடுகின்றமையை மேலுள்ள படங்களில் காணலாம். அந்நிகழ்வின் இடையே யாழ்.மாவட்ட எம்.பியான சி.சிறிதரன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனுடன் உரையாடுகின் றமையை பக்கத்தில் உள்ள படத்தில் காணலாம்.

# பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு ஆஸ்திரேலியா விசா மறுப்பு

கொழும்பு, நவ.09

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு ஆஸ்திரேலியாவுக்கான விசா வழங்குவதற்கு இலங்கையில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் மறுத்துள்ளது.

கடந்த ஒன்றரை வருடத்துக்கு முன்னர் புங்குடுதீவில் மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டின் பிரதான சந்தேக நபரை விடுவிக்குமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியவர் என்ற அடிப்படையிலேயே இவருக்கு விசா கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. எனினும், அதனை உறுதிப்படுத்தும் வெளிப்படையான - செய்திக் குறிப்பு ஏதும் வெளியாகவில்லை.

ஆஸ்திரேலியாவில் கல்வி கற்கும் தனது மகளின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்குச் செல்ல விசா அனுமதி கோரியே அவர் விண்ணப்பித்திருந்தார்.

அவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் காரணமாகவே அவருக்கு விசா நிராகரிக்கப்பட்டுள்ளது என்று ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

வித்தியா கொலையின் பிரதான சந்தேக நபரான மகாலிங்கம் சசிக்குமார் எனப்படும் சுவிஸ் குமார் என்பவரை மக்கள் பிடித்து மரத்தில் கட்டி வைத்தபோது, அப்போதைய யாழ். பொறுப்பதிகாரியாக செயற்பட்ட லலித் ஜயசிங்கவின் ஆலோசனைக்கமைய பொலிஸ் குழுவொன்றால் அவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் கிளிநொச்சி வரை பொலிஸ் பாதுகாப்பின் கீழ் இரகசியமாக கொண்டு செல்லப்பட்ட அவர் பின்னர் கொழும்புக்குத் தப்பிச் செல்ல சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

# மாகாணக் கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் குழப்பமாம்!

## நேற்று மாகாணசபை அமர்வில் சுட்டிக்காட்டு

மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற தரம் 11இன் மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெற வேண்டிய திகதிக்கு முன்பதாக நடைபெற்றதால் குழப்பம் ஏற்பட்டது.

வடமாகாணசபையின் 65 ஆவது அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. அப்போதே வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் மேற்கண்ட விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக எம்.கே. சிவாஜிலிங்கம் கூறியவை வருமாறு:

வடமாகாணம் முழுவதும் கடந்த 4ஆம் திகதி நடைபெறவிருந்த தரம் 11இன் மூன்றாம் தவணைப் பரீட்சையில் வரலாறு பாடத்திற்கான பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் முல்லைத்தீவு பாடசாலையொன்றில் கடந்த 4ஆம் திகதியே அதிபரினால் அந்தப் பாடப் பரீட்சை நடத்தப்பட்டுவிட்டது. இதனால் வரலாறு பாடத்துக்கான பரீட்சை வினாத்தாள் 4ஆம் திகதியே வடமாகாணம் முழுவதும் வெளியாகிவிட்டது.

இந்நிலையில் பரீட்சைக்காக படித்த மாணவர்கள் பாதிக்கப்படப் போகிறார்கள். எனவே இவ்விடயம் தொடர்பான அவசர நிலையை கருதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், இந்த விடயம் மிகவும் பாரதூரமானது என்றும் மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் இத்தகைய முறைகேடு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டினார்.

அதனைத் தொடர்ந்து இவ்விடயம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராசா ஆகியோரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அவைத்தலைவர் இந்த விடயத்தை கல்வி அமைச்சர் குருகுலராஜா கவனித்துக்கொள்வார் எனக் கூறி அதனை முடித்து வைத்தார்.

# பனை மரம் தறித்து வெட்டிய ஐவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது

பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி கோயில்வயல் பகுதியில் பனை மரங்களைத் தறித்து மரங்களாக வெட்டிக் கொண்டிருந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினராலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான ஐவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர்கள்



ரோந்தில் ஈடுபட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.என்று பொலிஸ் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் பளைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

(ம - 09)

# வேப்பிலை பறிக்க முற்பட்ட யுவதி கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார்

சுவாமிக்கு சாத்துவதற்காக வேப்பிலைபறிப்பதற்கு முயன்ற யுவதி ஒருவர் தவறிக் கிணற்றில் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை சங்கானைபட்டினசபைவீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தேவராசாநிஷா (வயது-18) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த யுவதி பூக்கள் மற்றும் வேப்பிலைகளைப் பறித்து சுவாமிக்கு சாத்துவது வழக்கம் என்று கூறப்படுகின்றது. நேற்றுக் காலை 7 மணியளவில் பூக்களைப் பறித்த பின்னர் அவரின் வீட்டுக்குஅண்மையில், வயலில் நின்ற வேம்பில் இலைகளைப் பறிப்பதற்காகச் சென்றார்.

அங்குள்ள கிணற்றுக்கட்டில் ஏறி நின்று வேப்பிலைகளைப் பறித்தபோது தவறிக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

சடலம் முதலில் சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு இடம்பெற்ற பிரேத பரிசோதனைகளைத் தொடர்ந்து சடலம் நேற்று பிற்பகல் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ம-58)

## ஜனாதிபதி இருந்திருந்தால் இப்படி நடந்திராதாம்!

நான் கொழும்பில் இருந்திருந்தால் அங்கவீனமுற்ற இராணுவத்தினர் மீது தண்ணீர்ப் பிரயோகம் செய்ய விட்டிருக்க மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

நான் அவர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு வந்து ஏதாவது கூறிச் செல்லுங்கள் என்றிருப்பேன். நான் இந்தியாவில் இருக்கும் போது எனக்கு ஒரு தொலைபேசி அழைப்புஎடுத்துக்கூறியிருந்தால் கூட நான் இப்படி நடக்க இடமளித்திருக்கமாட்டேன்.- என்றார்.

# தங்கம் கடத்தியவர்களுக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

தலைமன்னாரில் இருந்து கடலுக்கு ஊடாக இந்தியாவுக்கு தங்கம் கடத்திய குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக 5 கிலோகிராம் தங்கத்தைக் கடத்தி சென்ற இரு மீனவர்களை மன்னார் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

அவர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சுங்கத்



திணைக்கள மாகாண அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த இருவரையும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ம-09)

# யாழ். நகர் வீட்டில் பட்டப்பகலில் நேற்று நகை, பணம் திருட்டு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி பகுதியில் உள்ள வீடொன்றில் பட்டப் பகலில் கதவுகளை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் 9 பவுண் நகைகள் மற்றும் 1 இலட்சத்து 36 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கும் 1 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

சம்பவ நேரம் மனைவி பணிக்குச் சென்றிருந்தார் என்றும் கணவன் மகளைக் கூட்டி வருவதற்காகப் பாடசாலைக்குச் சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தருணம் பார்த்து இவர்களின் வீட்டுக்குச் சென்ற திருடர்கள் கதவை உடைத்து உள்ளேபுகுந்து திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமையைத் தொடர்ந்து குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் நடைபெற்ற வீட்டுக்கு நேரடியாகச் சென்ற பொலிஸார் திருடர்கள் விட்டு சென்ற சான்றுப் பொருள்களையும் மீட்டனர்.

(ம-09)

காலைக்கதிர் Kalaikkathir



# இந்தியாவில் ரூ.500, ரூ.1000 நோட்டுக்கள் செல்லுபடியாகா எனத் திடீர் அறிவிப்பு

இந்தியாவில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகா என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திடீரென அறிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன் அந்த நோட்டுக்களை வங்கிகளில் கொடுத்து செல்லுபடியாகக் கூடிய வேறு நோட்டுகளுக்கு மாற்றிக் கொள்ளலாம் எனவும் அவர் நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

ஊழல், கறுப்பு பணத்திற்கு எதிராக தான் முன்னெடுக்கும் இந்த போரில் மக்கள் ஒத்துழைக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் பயங்கரவாதிகளால் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த பரபரப்பான சூழ்நிலையில் பிரதமர் மோடி நேற்று மத்திய அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினார்.

பின்னர் முப்படைத் தளபதிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்தோவால் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அதன் பின்பே இந்த அதிரடி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

## மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லியிருந்தேன். போலி ரசீதுகள் மூலம் பல லட்சங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளன. உள்ளகக் கணக்காய்வு இதனை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் அங்கு உடனுக்குடனான உள்ளகக் கணக்குப் பரிசீலனை இருந்திருக்கவில்லை. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அங்கு வாய் விட்டுக் கேட்டு கையூட்டு வாங்குகிறார்கள்.

எனது சிபாரிசு என்ன வென்றால் அவர்களை முழுமையாக இடமாற்றம் செய்து நிலைமையைத் திருத்த வேண்டும் என்பதே.

அவமானம் யாழ். மாநகர சபை முழுவதுக்கும் மட்டுமல்ல, வடமாகாண சபைக்கும்தான். எனக்குத் தெரியும். நான் வரியிறுப்பாளன். கட்ட அனுமதிகள் தொடர்பாக அங்கு பல பிழைகள் நடக்கின்றன. முதலமைச்சர் இவற்றை கவனத்தில் எடுக்க வேண்டும். இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளரது அறிக்கை என்னிடம் உள்ளது. அங்குமுறைகேடுகள், கையூட்டுப் பெறுதல் தொடர்கின்றன" – இப்படி பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேற்றைய அமர்வில் ஆழ்ந்த கவலையும் விசனமும் வெளியிட்டார். (உ)

## பிரி. அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வை அரசமைப்பின் ஊடாக அடைவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

இச்சந்திப்பின் போது வடக்கிலே காணப்படும் அதீத இராணுவப் பிரசன்னம் மற்றும் நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளில் இராணுவத்தின் இடையூறுகள், அதனால் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சருக்கு விளக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பொதுமக்களின் காணிகள் விடுவிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் விவரித்தார். இந்தக்காணிவிடுவிப்புகள் இன்னும் துரிதகதியில் இடம்பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நல்லிணக்கத்தை நோக்கிய இலங்கையின் பயணத்தில் பிரித்தானியாவின் பங்கும் சர்வதேசத்தின் கண்காணிப்பும் பங்கும் கடந்த காலங்களில் இருந்ததைப் போல தொடர்ச்சியாக இருக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் கடந்த காலங்களில் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளின்போது பிரித்தானியா ஆற்றியபங்களிப்பைவரவேற்றதோடு தொடர்ந்தும் அத்தகைய பங்களிப்பின் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினார்.

அரசியல்யாப்புஉருவாக்கம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்குப் பிரித்தானியா தொடர்ந்தும் ஒத்துழைப்பும் ஊக்கமும் கொடுக்கும் என இந்தச் சந்திப்பில்கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுகள், துஷ்பிரயோகங்கள், முறைகேடுகள் குறித்து அந்த அறிக்கை விலாவாரியாக – வரிசையாக – பட்டியலிட்டுக் காட்டியது. பல கோடி ரூபா பெறுமதியான முறைகேடுகள் குறித்து அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

கணக்குக் குழுவின் அறிக்கையும் பரிசீலனையும் இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவர்கள் மீண்டும் மீண்டும் "யாழ்.மாநகரசபையில் ஈ.பி.டி.பி. காலத்தில் ஊழல்கள் மோசடிகள்..'' என்று உச்சரித்த வண்ணமிருந்தனர்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, கணக்காய்வு அறிக்கையில் 'ஊழல்' என்ற சொல் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

"நிதிமுறைகேடுகள் அல்லது நிர்வாக முறைகேடுகள்" என்று பயன்படுத்த வேண்டும் எனச் சபைத் தலைவர் சிவஞானத்தை நோக்கி ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார். அப்போது குறுக்கிட்ட அவைத் தலைவர் "கணக்கு என்றால் எல்லாரும் கணக்கு விடுவதுதானே" என்று ஒலிவாங்கியில் சிரித்தார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் தவநாதன் வடமாகாண சபையில் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமையால் வடமாகாண சபையின் அமைச்சர்களை விசாரிக்கத்தானே விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் நீங்கள் எப்படி யாழ். மாநகர சபை ஊழல் மோசடிகளைப் பற்றி கதைக்க முடியும் உங்களுக்கு அதற்கு தார்மீக உரிமையில்லை என்று குமுறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமராட்சி உறுப்பினர் சுகிர்தன் குறுக்கிட்டார். "அதுதான் நாங்கள். அதுஎங்கள்நேர்மைத் தன்மையை விளம்புகிறது அல்லவா?" என்று பதிலளித்த அவர் 2012, 2013 காலப் பகுதியில் யாழ். மாநகர சபையில் படுமோசமான ஊழல் நடந்தது என்றும் தற்போதும் மோசடி தொடர்கிறது என்றும் பலமாக வாதாடினார். சுகிர்தன் தன்னிடம் தற்போதைய ஊழல்கள் தொடர்பான சகல விவரங்களும் உள்ளன என்றும் கூறினார். ஒப்பந்தக் கோரலை ஒரு முகப்படுத்தி மாகாணத்தின் பிரதம செயலாளரின் கீழ்கொண்டுவர வேண்டும் என்று சபையைக் கேட்டுக்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தற்பொழுது யாழ். மாநகர சபையில் மட்டுமல்ல நல்லூர் பிரதேச சபையிலும் முறைகேடுகள் நிகழ்வதாகக் கூறி தனக்கு அவ்விவரங்கள் தெரியும் எனச் சூசகமாக வெளிப்படுத்தினார்.

இதற்கிடையில் "ஊழல் என்ற சொல்லுக்கும் முறைகேடு என்ற சொல்லுக்கும் வித்தியாசம் விளங்க முடியவில்லை. இவ்விரண்டு சொற்களுக்குமிடையிலுள்ள வித்தியாசத்தை தயவு செய்து விளக்குங்கள்" என்றும் புளொட் உறுப்பினர் பவன் கேட்டார்.

ஊழல் என்பது Fraud அல்லது Corruption என்றும் முறைகேடு என்றால் Irreqularity என்றும் அவைத்தலைவர் சி.வி.கே. சிவ ஞானம் விளக்கினார்.

அதேவேளை சிவாஜிலிங்கத்துடன் சூடான விவாதத்தில் ஈடுபட்ட சிவஞானம் ஒரு கட்டத்தில் "என்ன செய்வாய்...? எழும்பி வரப்போறியா?...." எனக் கேட்டார். சிவாஜிலிங்கம் சபைத்தலைவரை நோக்கி நகர முற்பட்ட வேளையில் தான் இவ்வாறு நடைபெற்றது. சிவாஜிலிங்கம் செங்கோலைக் காவியோடும் நோக்கத்தில் சபாபீடத்தை நோக்கிச் செல்ல முற்பட்டிருக்கலாம் எனவும் பேசப்பட்டது.

இப்படி விவாதங்களும் அசைவுகளும் அனல் பறந்த வேளை சபையின் தலைவர் தேநீர் இடைவேளைக்குச் சபையை ஒத்திவைத்தார். பின்னர் தேநீர் இடைவேளையின் பின்பு சபை தொடங்கும்போது தனது சொற்பிரயோகத்தையிட்டு அவைத்தலைவர் சிவஞானம் வருத்தம் தெரிவித்தார்.

## வலிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார் சைக்கிளில் சென்ற மூவர், சங்கானை – அராலி வீதியால் மற்றொரு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களை மறித்தனர்.

அவர்கள் நின்றவுடன் முகமூடி நபர்களில் ஒருவன் 'வெட்டடா, வெட்டடா' என்று கத்தியிருக்கிறான். இதனால் அச்சமடைந்த இரு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியோடினர்.

அவர்கள் ஓடித் தப்பியதால் ஆத்திரமடைந்த முகமூடி நபர்கள் தாங்கள் வைத்திருந்த இரும்புக் கம்பியால் மோட்டார் சைக்கிளைத் தாக்கிச் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றனர்.

தொடர்ந்து 8 மணியளவில் சித்தங்கேணி டச்சு வீதிக்குச் சென்ற மேற்படி கோஷ்டி அங்கு கதைத்துக்கொண்டுநின்ற இளைஞர்களைக் கத்தியால் வெட்ட முயன்றனர். இதன்போது அவர்கள் அலறியடித்துக்கொண்டு தப்பியோடினர். ஆனாலும் அவர்களின் கத்திவெட்டில் இரு இளைஞர்கள் சிறுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் நேற்றிரவு வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடுகளைப் பதிவுசெய்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம–58)

## 'நெல்சிப்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்கு மாகாணசபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது.

மேற்படி குழுவின் அறிக்கை நேற்று நடைபெற்ற அமர்விலே சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த அறிக்கையை சமர்ப்பித்து பேசிய விசாரணைக் குழுவின் தலைவர் வி.சிவயோகம் கருத்து தெரிவிக்கையில் –

இரு உள்ளூராட்சி மன்றங்களிலும் சுமார் 43லட்சத்து 48 ஆயிரம் ரூபா நிதி ஊழல் செய்யப்பட்டுள்ளது. மேலும் எமது விசாரணைக்குழு விசாரணைகளை மேற்கொள்வதற்கு முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளர் போதிய ஒத்துழைப்பை எமக்கு வழங்கவில்லை.

இந்நிலையில் பின்னர் உள்ளூராட்சி ஆணையாளராக குகநாதன் நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

விசாரணைக் குழுவின் உறுப்பினர் அ.அரியரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில் –

முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளர் இந்த விசாரணை நடத்தப்படக்கூடாது என்பதில் குறியாக இருந்தார். அத்துடன் எமக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கும் மறுத்து விட்டார். இதனால் எமது விசாரணையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது – என்றார்.

நெல்சிப் திட்டத்தின் அப்போதைய பணிப்பாளரான அந்த உள்ளூராட்சி நிர்வாகத்திற்குப் பொறுப்பான இலங்கை நிர்வாகசேவை அதிகாரி ஏதோ சில யுத்திகள் மூலம் இப்பொழுது வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனவும் சர்வதேசப் பொலிஸான 'இன்ரப்போல்' மூலம் இவர்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.

கையாலாகத மாகாணசபையென எதிர்க்கட்சியினர் வைது தள்ளினர்.

முன்பிருந்த பிரதம செயலாளர்தான் நெல்சிப் ஊழலில் ஈடுபட்டவர்களை அதிகாரபூர்வமாகப் பேணிவந்தார் எனவும் உறுப்பினர்கள் சிலர் விமர்சித்தனர்.

இவ்விடயங்களில் தற்போதைய பிரதம செயலாளர் அமைத்துள்ள விசார ணைக் குழு தனது நடவடிக்கைகளை தொடர்கிறது என்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முதலமைச்சர் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், அயூப் அஸ்மின் ஆகியோர் உள்ளடங்கலாக பல உறுப்பினர்கள் மேற்படி விடயம் நிதிக் குற்றவியல் விசாரணை பிரிவுக்கு முறையிடப்பட வேண்டும், அதுவே முன்னர் ஊழல் செய்தவர்களுக்கும், இப்போது ஊழல் செய்து கொண்டிருப்பவர்களுக்கும் பாடமாக அமையும் எனக் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மேற்படி விடயத்தை காணக்காய்வாளர்நாயகத்திற்கு ஆற்றுப்படுத்தி, 2 மாத கால அவகாசத்தை வழங்கி, அறிக்கை பெறலாம் எனக்கூறினார். எனினும் இதற்கு சபையில் சில உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டார். இந்த விடயம் தொடர்பாக சிவாஜிலிங்கம் தெரிவிக்கும் கருத்தும், அவைத் தலைவர் தெரிவிக்கும் கருத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை எனக் கூறிய அவர், அவ்விரண்டையும் செயற்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து இவ்விடயத்தை நிதி குற்றவியல் விசாரணை பிரிவுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் தெரியப்படுத்துவது என்று தீர்மானிக்கப்படுகின்றது என அவைத் தலைவர் அறிவித்தார்.

நேற்றைய அமர்வில் வவுனியா நகரசபையில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பான கணக்காய்வு விடயங்களும் ஆராயப்பட்டன. சம்பந்தப்பட்ட அதிகாரி 5 இலட்சம் ரூபா பணத்தை மீளக்கட்டியுள்ளார் என்றும், அவருக்கு தண்டணை இடமாற்றம் என்றும் வழங்கப்பட்டுள்ளது சுட்டிக் காட்டப்பட்டது. எனினும் உரிய முறையில் முழுமையான விசார ணைகள் நடத்தப்பட்டு கடுமையான தண்டணை அவசியம் என்றும் இவ்வாறான அதிகாரிகளுக்குத் தகுந்த பாடம் கற்பிப்பது அவசியம் என்றும் வவுனியா நகரசபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய மாகாணசபை உறுப்பினருமான புளொட் லிங்கநாதன் தெரிவித்தார்

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரை நிரந்தரக் கடைகளாக – அமைக்கும் பணி மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு, அவை நேற்று உத்தியோகபூர்வமாக சந்தை வியாபாரிகளிடம் வடமாகாண முதலமைச்சரினால் கையளிக்கப்பட்டுள்ளன.

இதனத் தவிர மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் 7கோடி 40 லட்சம் ரூபா வியாபாரிகளுக்கான நட்டஈடாக வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. உள்ளூராட்சி அமைச்சினால் புதிய நிரந்தர சந்தை கட்டடம் அமைப்பதற்கு 15 கோடி ரூபாவும், தீயணைப்பு கட்டமைப்பை உருவாக்குவதற்கு 10 கோடி ரூபாவும் என மொத்தமாக 32 கோடி 40 லட்சம் ரூபா வழங்குவதற்கு அரசின் அமைச்சர்கள் தன்னிடம் உத்தரவாதமாகத் தெரிவித்துள்ளனர் என முதலமைச்சர் கூறினார்.

மேலும் இங்கு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் –

வடமாகாணத்தில் முதல் முறையாக ஒரு கோடி 13 லட்சம் ரூபா திட்டத்தை மிக மிக குறுகிய காலத்தில் நேர்த்தியாக நிறைவு செய்துள்ள நடவடிக்கையாக கிளிநொச்சிபொதுச்சந்தைக்கான இந்த அரைநிரந்தரக்கட்டம் அமைக்கப்பட்டமையே காணப்படுகிறது. தன்னுடைய கடமை நேரத்திற்கு அப்பால் இரவு பகலாக நின்று இந்தப் பணிகளை மேற்கொண்ட கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் கம்சநாதனுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதன் தலைமையில் இடம்பெற்ற கடைத்தொகுதிக் கையளிப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தவநாதன், அரியரட்ணம், பசுபதிப்பிள்ளை மற்றும் வடக்குமாகாணபிரதமசெயலாளர் பத்திநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் பிரபாகரன், சந்தை வர்த்தகர்கள் எனப் பலர்கலந்துகொண்டனர். (உ–70)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.